பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 தை 27 ரவி ஆகிரி 14 இதழ் 358
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 9 2 '8

யாழ். பல்கலைக் கழக

## கலைப்பீட மாணவர்களின் பகிஷ்கரிப்பு தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில வாத்தகபட்டப் படிப்பை பூர்த்திசெய்த மாணவர்களுக்கு வணிகமாணிப்பட்டம் வழங்கப்படாதமை குறித்து, தொடர்ந்து பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவரும் மாணவர்கள் இம்மாதம் 11ம் திகதிவரை தமது பகிஷ்கரிப்பை நீடித்துள்ளனர்.

இது சம்பந்தமாக நேற்றுக் காலை பல்கலைக்கழக மாணவர் அவைக் கூட்டம் தலைவர் திரு. கே. என். இராஜநாயகம் தலைமையில் கூடி ஆலோசனை நடத்தியதும்.

இக் கூட்டத்தில் கலைப்பீட பிரதிநிதிகள் திரு. அன்ரன் ராஜ்குமார், திரு. பி. பாலச்சந்திரன், வணிக மாணவர் மன்றத் தலைவர் திரு ஸ்ரீகிருஷ்ணன் உட்பட செயலாளர் பொருளாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அண்மையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத் திறப்பு விழவுக்குவந்திருந்த உயர்கல்வி அமைச்சின் செய

(8ம் பக்கப் பார்க்க)

★ கோர லொறி விபத்தில்

# ஒரே குடும்பத்தவர் நால்வர் பலி!

அறுவரின் உயிர் ஊசலாடுகிறது

## உலகின் முடிவிலிருந்து திரும்பியவர்களுக்கு நேர்ந்த அவலம்

(நுவரெலியா)

அம்பேவல - பட்டிப்பொல வீதியில் நேற்று ஏற்பட்ட கோர லொறி விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பலியாகினர். ஆறு பேர் ஆபத்தான நிலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறர்கள்.

உலகின் முடிவு என்று யில் திரும்பிக்கொண்டிருந்த அழைக்கப்படும் இடத்தைப் போதே இவ்விபத்து ஏற்பட பார்வையிட்டுவிட்டு லொறி டது.

பண்டாரவளை கில் ஓயா வைச்சேர்ந்த இவர்கள் நுவரெலியா மாவட்டத்திலுள்ள உலகின் மூடிவு என்று அழைக்கப்படும் இடத்தைப்பார்வையிட்டுவிட்டு திரும்பியபோதே இப்பயங்கரம் நிகழ்ந்தது.

இவ்விபத்தில் படுகாயமடைந்து நுவரேலியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களைக் காப்பாற்றும்

(8ம் பக்கம் பார்க்க)

## கச்சதீவு உற்சவம்: செயலகத்தில் மாநாடு

(யாழ்ப்பாணம்)

அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவம சம்பந்தமான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து இன்று யாழ் செயலகத்தில் மகாநாடு நடைபெறுகிறது.

யாழ். அரசாங்க அதிபரும் யாழ்.மாவட்ட செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா தலைமையில் நடைபெறும் இம் மகாநாட்டில், யாழ் செயலக தலைமைகாரியாலய பொறுப்பதிகாரியான உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சுப்பிரமணியம் மற்றும் பொலிஸ், இராணுவ, கடற்படை அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். [மா]

# அமரர் ஜி.ஜி.க்கு இன்று அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

அமரர் ஜி. ஜி பொன்னம்பலத்தின் 5வது சிரார்த்த தினத்தையொட்டி இன்று காலை யாழ். மாநகரசபை தமிழ்க் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களான திரு. துரைராஜா சாந்திகுமார், டாகடர் ஏ. எல். ஏபிரகாம், திரு. சௌந்தரம் ஆகியோர் குருநகரில் உள்ள ஜி. ஜி. சிலைக்கு மலர் மாலை சூட்டி அஞ்சலி செலுத்துவர்.

இன்று பிற்பகல், யாழ். தமிழ்க் காங்கிரஸ் கட்சிக் காரியாலயத்தில் கட்சித் தலைவர் சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நினைவாஞ்சலிக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் தமிழ்க்காங்

(8ம் பக்கம் பார்க்க)

## இங்கிலாந்து கிரிக்கட் குழுவின் முதல்ஆட்டம் இன்று

(கண்டி)

இலங்கை வந்துள்ள இங்கிலாந்து கிரிக்கட் கோஷ்டி இன்று அஸ்கிரிய விளையாட்டு மைதானத்தில் இலங்கை கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை தலைவர் கோஷ்டியுடன் மோதுகின்றது. (இ)

# விவசாயி ஒருவர் கோரக் கொலை!

## சுழிபுரத்தில் சம்பவம்

(மாவிட்டபுரம்)

சுழிபுரம் காட்டு புலத்தில் விவசாயி ஒருவா கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்,

38 வயதான எஸ். கார்த்திகேசு என்ற விவசாயியே கொலை செய்யப்பட்டவராவார்.

தமது தோட்டத்திலுள்ள புகையிலைக்கன்றுகளுக்கு நீர்பாய்ச்சிவிட்டு வீட்டுக்குத் திரும்பிய இறந்தவரை வழிமறித்த 6 பேர் வாள், கத்திகளினால் வெட்டியதுடன் பொல்லுகளாலும் தாங்கினர் என்று பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு கே.வி. விக்கினேஸ்வரன் ஸ்தல விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்.

காங்கேசன்துறை பொலிசார் குறித்த ஆறுபேரையும் தேடி வலைவீசியுள்ளனர்.

திருநெல்வேலி இளைஞன் மரணம் :

## பிரேத பரிசோதனை : நிரந்தர சட்ட வைத்திய அதிகாரியே நடத்துவார்

### தீர்ப்பு வழங்குவதும் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் திருநெல்வேலியில் மர்மமான முறையில்இறந்து கிடந்தஇளைஞனின் சடலம் யாழ். சட்டவைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விசாரணையைமேற்கொண்டபதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கத்துக்கு கிடைத்த இரகயத் தகவல்களின் பேரில் இறந்த இளைஞனின் சடலம் கொலையா? தற்கொலையா என அறிவதற்காக நிரந்த சட்ட வைத்திய அதிகாரியே பிரேத பரிசோதனை செய்யவேண்டுமென்று அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கொழும்பு சென்றுள்ள நிரந்தர சட்ட வைத்திய அதிகாரி நாளை 10ம்திகதி யாழ்ப்பாணம் வந்ததும் பிரேத பரிசோதனை நடாததப்படுமென்றும், அதுவரைசடலம் யாழ்.ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்படவேண்டுமென்றும் உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவவையும் ஒத்திவைத்தார்.

### மரணம் பற்றி பலர் விசாரணை

திருநெல்வேலியிலுள்ளயாழ். பல்கலைககழக வீதியில் மர்மமானமுறையில் இறந்துகிடந்த இளைஞனின் மரணம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிசார் மேற்படி வீதியைச் சேர்ந்த இளைஞர்கள உட்பட பலரை தீவிர விசாரணைசெய்து வருகின்றனர்.

சித்திரவேலு லோகேஸ்வரன் [வயது 16] என்பவரது மர

8-ம் பக்கம் பார்க்க)

# திருக்கோயில் மக்களை அமிர் சந்தித்துப் பேசினர்

## இன்றும் நாளையும் அம்பாறை தமிழ் கிராமங்களுக்கு செல்வார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இங்கு வந்த எதிர்க் கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று திருக்கோவிலுக்குச் சென்று அங்கு வாழும் தமிழ் மக்களின் பிரச்னை குறித்து மக்களையும் பிரமுகர்களையும் சந்தித்து உரையாடினார். காலை மட்டக்களப்பு வந்த திரு. அமிர்தலிங்கத்துக்கு கூட்டணிப் பிரமுகர்களும் ஆதரவாளர்களும் வரவேற்பளித்தனர்.

இன்றும் நாளையும் திரு. அமிர்தலிங்கம் அம்பாறை மாவட்ட தமிழ் கிராமங்களுக்குச் சென்று அவர்களின் பிரச்னைகளை நேரில் கேட்டறிவதுடன் அங்கு தமிழர் விடுதலைக்கூட்டணி கிளைகளைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வார் என்று கூட்டணிப் பிரமுகர் ஒருவர் கூறினர்.

### பொதுச்சபைக் கூட்டம்

11ம் திகதி மட்டக்களப்பு சிவானந்தா ஆச்சிரமத்தில் நடைபெறும் மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி பொதுச் சபைக் கூட்டத்திலும் அன்று மாலை மட்டக்களப்பில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் திரு. அமிர்தலிங்கம்

(8ம் பக்கம் பார்க்க)

# டோக்கியோ ஹோட்டலில் தீ! 24 பேர் பலி!!

டோக்கியோ பெப்.8

ஜப்பானிய தலைநகரமான டோக்கியோவிலுள்ள ஹோட்டலொன்றில் இடம்பெற்ற தீவிபத்தில் 32 பேர் பலியானதாகவும், 28 பேர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

டோக்கியோவிலுள்ள 10 மாடிகளைக்கொண்ட ஆடம்பர ஹோட்டலொன்றிலேயே இத்தீவிபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தீவிபத்து இடம்பெற்றபோது ஹோட்டலில் தங்கியிருந்த 300பேரில் சிலர் படுக்கை விரிப்புகளை கயிறுகளாக உபயோகித்து கீழே இறங்கியதாகவும் கூறப்பட்டது

இத்தீ விபத்து இடம்பெற்ற இடத்துக்கு தீயணைக்கும் படையினர் சென்று, 6 மணித்தியாலமாக தீயணைக்கும் வேலைகளில் ஈடுபட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்விபத்துக்கான காரணம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (வெ)

**மணிவாக்கு**

ஒவ்வொருவனும் காது கொடுத்துக் கேட்பதில்துரிதமாகவும், பேசுவதில் மெதுவாகவும், கோபம்கொள்ளுவதில் தாமதமாகவும் இருப்பானாக.

— பைபிள்

# நமது நோக்கு

## காணி அபிவிருத்தி

டுகள் நிரம்பி ழிந்த காலனி ஆட்சியில் இலங்கைக்கு வந்த பிரிட்டிஷ் சிவில் சேவிஸ் உத்தியோகத்தர்கள் காணி அபிவிருத்தியில்அக்கறைகாட்டவில்லையென்பது தெளிவு. மலையக தேயிலைத் தோட்டங்கள் கதை வேறு.

பிரிட்டிஷ்ஏகாதிபத்தியத்தில் உறுதி கொண்டவெள்ளையர்கள் உலகிலே மக்களை ஆட்சி செய்யும் திறமை ஆங்கிலேயருக்கே உண்டு என நம்பினர்.

இந்த நூற்றுண்டின் முதற் பகுதியில் இந்தநாட்டுக்கு வந்த சிவில் சேவிஸ் உத்தியோகத்தர்கள் பலர் அரசாங்க அதிபராகவும், உதவி அரசாங்க அதிபராகவும் கடமையாற்றினர். மலேரியா என்ற கொடிய நோயால் மாண்டு மடியும் ஏழைக் கிராம வாசிகளுக்கு போதிய குவினைன்மருந்தை விநியோகிக்க இயலாத முறையில் நிர்வாகத்தை நடத்தினர் 'விதி'யில் முழு நம்பிக்கை வைத்த பாமர மக்கள் இது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கொடுமை என்பதை அறிந்திருக்கவில்லை.

இதற்குநேர்மாறுன மிகச் சில பெரியார் இங்கு வந்திருக்கின்றனர். "காணி அபிவிருத்தி" அன்று கேள்விப்படாத பண்டம். என்றாலும் காட்டுக்குள் இயங்கிவரும் கிராமங்களின் துன்ப வாழ்க்கையைக் கண்டு மனமிரங்கி, இயன்றளவு நிர்வாகத்தைமக்கள் நலனுக்கு மாற்றி அமைத்தனர். ஆயினும் காடு காடே! காட்டினில் உள்ள கிராமம் அந்த அந்த நிலையிலேயே இருந்தது.

இத்தகைய கொடிய ஏகாதிபத்திய ஆட்சியில் வெறுப்புக் கொண்ட ஒரு பெருமகன் லியனுட்வுல்வ் (Leonard Woolf) என்பவர் பிற்காலத்தில் அவர் தம்முடைய கசப்பான அனுபவத்தை புலமை நிறைந்த காவியமாக ஒரு ஆங்கில நாவல்வடிவில் 'காட்டில் உள்ள கிராமம்' என்ற புகழ்பெற்ற நூலாக எழுதியிருக்கிறுர்.

சுதந்திர இலங்கையில் சிவில் சேவிஸ் உத்தியோகத்தர்களின் மனப் பாங்கு மாற்றமடைந்தது இயற்கையே. ஆயினும் பலர் கச்சேரியில் கொலுவிருந்து தங்களுக்கென ஒரு சிறு ஏகாதிபத்திய ஆட்சியை நடத்தி வந்தனர்; இன்றும் சிலர் அவ்வாறே!

காணியில்லாமல், உணவு உற்பத்திக்குரிய வசதிகள் இல்லாமல் அறியாமையில் அமிழ்ந்திருந்த ஏழை மக்களை தன்னிறைவு காணும் ஆற்றல் பெற்ற விவசாயிகளாக மாற்றத் திட்டம் வகித்தவர் இலங்கையின் முதற் பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா என்பதை மறுப்பதற்கில்லை.

அவர் வகுத்த திட்டங்களை உயிர்த்துடிப்புடன் விளங்கக்கூடிய விவசாய கிராமங்களாக மாற்றும் பணியில் அவர் தெரிந்தெடுத்த சிவில் சேவிஸ் உத்தியோகத்தர்களில் இருவர் முன்னணி வகித்தனர். தெற்கில் காலஞ் சென்ற சி. பி. டி. சில்வாவும் வடக்கில் அண்மையில் சிவபதமடைந்த ஸ்ரீகாந்தாவுமென்பது வரலாற்றில் இடம் பெறும். மின்னேரியா சில்வாவும், கிளிநொச்சி ஸ்ரீ காந்தாவும் கிராமிய இலங்கையின் இரு கண்கள்.

சுதந்திரநாட்டைக் கட்டி எழுப்பும் பணியில் காணி அபிவிருத்தி இன்றும் முக்கியமாகவே இருக்கின்றது. ஆயினும் காட்டை அழித்து சேனை முறையில் பயிர்செய்யும் வழக்கம் தொடர முடியாத நிலை வந்துவிட்டது. காட்டை அழித்தல் தொடருமாயின் வரட்சியால் விவசாயம் தடைபடும். நாடு கெடும்.

இன்று காணி அபிவிருத்தி என்றுல் அது விவசாயத் திட்டங்களில் — கூடிய விளைச்சல், உரம் நீர் வசதி, மின்வசதி, பயிர்பாதுகாப்பு போன்ற விடயங்களுக்குரிய விவசாயத் தொழில் நுட்பத் திறமையை நாடி நிற்கின்றது.

எங்கள் அண்டை நாடாகிய இந்தியா இத்துறையில் மிக வேகமாக முன்னேறுகிறது. உலகப்புகழ்பெற்ற விவசாய ஆராய்ச்சி விஞ்ஞானிகள் அங்கு தொழிற்படுகின்றனர். அவர்கள் குழுவில் ஒன்று இந்நாட்டுக்குதவி புரிவதானுல் நாம் காணி அபிவிருத்தியைக் கருத்துள்ள திட்டமாக்க முடியும்.

## வணிக மாணவர் பிரச்னை

கலைப் பட்டமென்றுல் காறியே துப்புவாய், இஞ்சினியா துரையென்றுல் ஏங்கியே போவாய்!" என்றெரு நாடோடிப் பாட்டு.

கலைப் பட்டம் பெற்ற பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகள் வேலையின்றி வாடுவது நாடறிந்த விடயம்.

இந்தப் பட்டாளத்தை அதிகரிக்க விரும்பாது, திறமைமிக விருந்தோ இல்லாமலோ இன்றைய தொழில் நுட்ப உலகுக்குத் தேவையான வணிகத் துறைக்குரிய பாடங்களைப் படித்துத் தேறியவர்களுக்கு 'வணிக மாணி' என்ற பட்டமே உரித்தாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இதற்கு ஒரு முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பது வேதனைக்குரியது. படித்த மாணவர்கள், படிக்கும் மாணவர்கள் மனமுடைந்து, வகுப்புக்களைப் பகிஷ்கரிக்குமளவில் இது குழப்ப நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. வணிக மாணிப் பட்டம் இன்றேல் விடிவிளக்கெரித்ததன் பயனென்னே!

பல்கலைக்கழக நிர்வாகம் மான்யக் குழுவில் பெரிதும் தங்கியிருக்கிறது. உபவேந்தர் அதின் அதிகாரத்துக்குப் பல விடயங்களில் கட்டுப்பட வேண்டியிருக்கிறது. இது இன்றைய விருத்தியடையாத நிலை.

எனவே மான்யக் குழு மாணவர்கள் பிரச்னையை உடனடியாகக் கவனித்து நிதி வழங்குதல் அவசியம். விருத்தியடைந்த பல்கலைக் கழகம் தனது நிர்வாகத்தில் எழும் சிக்கல்களை தானுகவே அகற்றும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். இந்த நாள் எந்நாளோவென்று ஏங்கி நிற்கும் 'எமக்கு, இந்தப் பிரச்னையை சுமுகமாகத் தீர்த்து வைப்பதாக மான்யக் குழுத்தலைவர் பேராசிரியர் கல்பகே கூறியிருக்கும் உறுதி மொழி ஆறுதல் அளிக்கிறது.

இந்த நாட்டில் இன்று எந்தத்துறையிலும் சொல்வதொன்று செய்வதொன்ருயிருக்கும் நிர்வாக வழக்கம் ஏமாற்றம் அளிப்பது இயல்பு,

யாழ்ப்பாண வணிகமாணவர்களுக்கு இக்கதி ஏற்படாதெனை நம்ப நியாயமுண்டு.

# ★ இன்று ஜீ. ஜீ. நினைவு தினம்

# தமிழர் உள்ளத்தில் ஒளியாகத் திகழ்வர்

பொ. சபாரத்தினம்

இந்த நாட்டு அரசியலில் திரு. பொன்னம்பலம் அவர்களுடைய காலம், தமிழ் இனத்தின் பொற்காலமாகும். அன்னுரின் காலத்தே தமிழ் மரபினர் தாழ்வுமனப்பான்மையற்று இந்நாட்டில் வாழ்ந்தனர். தமிழ் இனத்திற்கு இந்த நாட்டில் எதிர்காலத்தே ஏற்பட இருந்த தாழ்வை அன்றே உணர்ந்தவர் திரு. ஜீ. ஜீ. தூங்கியிருந்த தனது இனத்தைத் தட்டியெழுப்பி, அரசியலில் விழிப்புணர்ச்சியை உண்டாக்கிய மாமேதை, அரசியல்ஞானி, தீர்க்கதரிசி எம்மை விட்டு மறைந்து ஐந்து ஆண்டுகள் ஓடிவிட்டன. என்றாலும் அன்னுரின் சேவை, துணிச்சல்மிகு பேச்சு எல்லாம் எம் நினைவை விட்டகலாது.

இந்த நாடு, தமிழ் இனத்திற்கும் சொந்தமானதென்ற உணர்வைச் சிங்கள மக்களுக்கும் உணர்த்தியவர் அமரர் ஜீ. ஜீ. என்றுல் அக்கூற்று மிகையாகாது. அன்று ஐம்பதுக்கைம்பது என்ற திட்டத்தை உணர்ச்சியுடனும், துணிச்சலுடனும், தன் பேச்சாற்றலால் இலங்கை அரசியலில் ஒரு எழுச்சியையும் உண்டாக்கிய அந்த மேதை இன்று எம்மிடையே இல்லை. அன்று அவர் நடத்திய சரித்திர முக்கியத்துவமுடைய பேச்சு, அரசியல் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட்ட ஒன்றுகும்.

சேர் பொன். இராமநாதனுக்குப் பின்னர் அவர் ஆற்றிய பணிகளைத் தொடர்ந்து ஆற்ற இறைவனுல் எமக்கு அளிக்கப்பட்ட ஆற்றலுடைத் தலைவன் அமரர் ஜீ. ஜீ. அன்னுர் கடந்த அரை நூற்றுண்டு காலமாக அரசியலிலும், சட்டத்துறையிலும் படைத்த சரித்திரங்கள் எத்தனை எத்தனையோ] அப்பெருமகன் தன் ஆற்றல், அறிவு அத்தனையும் இந்த நாட்டிற்கு, சிறப்பாகத் தமிழ் இனத்திற்கும் அர்ப்பணித்து வாழ்ந்தார் என்பதை யாரும் மறுக்கவோ' மறைக்கவோ முடியாது.

இந்தச் சரித்திர புருஷன், தன் இனத்தின் தனித்துவத்தை நிலைநாட்டியவர்களில் முதலிடம் கொண்டவர். திரு. ஜீ. ஜீ. அவர்கள் இல்லாதிருந்தால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னமே தமிழ்இனம் அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கும் என்பதை அவரின் அரசியல் எதிரிகளும் ஏற்றுக்கொண்ட ஒரு உண்மையாகும்.

தனது இனத்தின் உரிமைக்காக, கடல் கடந்துசென்று ஆங்கிலேயரும் வியக்கும்வண்ணம் சிறுபான்மையோரின் நிலையை விளக்கி வெற்றியும் கண்டார். ஆனுல் கப்பல் ஏற்றி அனுப்பியவர்களும். கூடச் சென்று முன்வந்தவர்களும்செய்தபெருந்தவறுல்தான் சோல்பரி அரசியல் திட்டம் இந்த நாட்டில் திணிக்கப்பட்டதுடன், தமிழ் இனத்திற்கும் அன்றைய தலைவர்கள் தீர்க்கதரிசனமற்ற அரசியல்

(7ம் பக்கம் பார்க்க)

# தமிழரின் ஐக்கியமே நாம் செலுத்தும் அஞ்சலி

இ. பாலசுப்பிரமணியம்

இன்று அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களது 5வது நினைவுதினம். எனவே அவர் தமிழ்ப்பேசும் மக்களுக்கு காட்டிவிட்டுச் சென்ற வழியை சிந்திப்பது தமிழ்ப்பேசும் மக்களின் அரசியல் எதிர்காலத்திற்கு பயனளிக்கக் கூடியதாக விருக்கும்.

ஒரேகட்சியில் இருந்த தமிழ்ப் பெருந்தலைவர்கள்சில கருத்து வேற்றுமைகளால்சில காலம் பிரிந்திருந்தபோதிலும் தமிழ்ப்பேசும் மக்களின் ஏகோபித்த தலைவர்களாக விளங்கிய அமரர் ஜீ.ஜீ., தந்தை செல்வா, அமரர் திரு. ஆகிய மூவரும் ஒரேவழியையே தமிழ்ப்பேசும் மக்களுக்கு காட்டி விட்டுச் சென்றுள்ளார்கள்.

அமரர் ஜீ. ஜீ. தனது அறிவுத்திறனுலும், வாக்குச்சாதுரியத்தாலும் பிற இன, மத, தேச மக்களுடன் நடந்து கொண்ட முறையால் இவர் ஓர் தனிப்பெரும் தலைவராகக் கருதப்பட்டார். இலங்கையிலுள்ள தமிழ்ப்பேசும் தேசிய இனம் இவர் அரசியல் சூருவளியை எதிர்நோக்கியநேரத்தில் வேற்றுமைகளை மறந்து ஒன்றுசேரவேண்டுமென்ற கோரிக்கையை வரவேற்று அமரர் தந்தைசெல்வாவின் தலைமையின்கீழும், அமரர் திருவினதும் மற்றும் 60சட்டத் தரணிகளுடனும் நான்கு தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான டிரயல் அட் பார் வழக்கில் ஏற்பட்டு தமிழ் பேசும் மக்களுக்கு அபாயம் ஏற்படும் நேரத்தில் அவர்களின் ஒற்றுமையை எவராலும் குலைக்கமுடியாது என்பதை உலகறியச் செய்தார்.

இவ்வழக்கில் அவசரகாலச் சட்டப் பிரகடனம் பற்றிய சட்டவலுவைப் பற்றி வெற்றிகரமாகப் பேசியபோதிலும், அரசியலமைப்புச் சட்டம்பற்றி அமரர் திரு எடுத்துரைத்த விவாதத்திற்கு தமது பங்கைச் செலுத்தத் தயங்கவில்லை.

இலங்கைத் தமிழரின் இறைமை 1619ம் ஆண்டு போத்துக்கேயருக்கும் அதன்பின் ஒல்லாந்தருக்கும், ஆங்கிலேயருக்கும் சென்று 1970ம் ஆண்டு இலங்கை பாராளுமன்றத்திற்கும், பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு மிடையிலான சட்டத்தொடர்பு துண்டிக்கப்பட்டு, அது இலங்கைத் தமிழரை வந்தடைந்து விட்டதென்றும், எனவே தம் மீண்டும் பெற்ற இறைமையை பிரயோகித்து விடுதலையடைவதே ஒரேவழிஎன்ற கருத்தை அமரர் திரு நீதிமன்றத்தில் எடுத்துரைத்தபின்பு, அவ்விடயம்பற்றி தானும் சில வார்த்தைகள்கூற அனுமதிக்குமாறு கோரி அமரர் ஜீ ஜீ. எடுத்துரைத்த வார்த்தைகளை நாம் மறந்துவிடக் கூடாது.

அமரர்ஜீ.ஜீ தனது கருத்தில் தமிழ்ப்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கை 1948ம் ஆண்டு தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டபொழுதே ஆரம்பமாகி, 1956ம் ஆண்டில் தனிச்சிங்களச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பொழுது தீவிரமடைந்து, இப்பொழுது தமது உரிமையை நிலைநாட்டுவதற்காக நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் துண்டுப்பிரசுரம் விநியோகித்ததற்காக மட்டும் குற்றவாளிக் கூண்டில்

(7ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## மினிபஸ் நெரிசல் அவஸ்தை நீங்குமா?

மினிபஸ் பயண சேவை எமக்கு ஒரு வரப்பிரசாதமாகும். எந்தவொரு அரசாங்கமும் இதுகாலவரை இவ்வித முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்ததில்லை. இத்தகைய வசதி எவருக்காக உருவாக்கப்பட்டதோ அவர் பிரயாணம் செய்யும்போது படும் நெரிசல் அவஸ்தைகளை உற்றுநோக்கும்பொழுது வேதனைக்குரியதாயிருக்கின்றது. ஒரு சிலருக்கு நெரிசலில் பயணம் செய்வது இன்பமாக இருக்கலாம். எல்லார் மனதிலேயும் ஒன்றுய் இருக்குமா? இதில் உருவாகும் அனர்த்தங்களும் சேதங்களும் இருசாராரையுமே பாதிக்கும்.

சட்டம் ஒன்றிருக்கின்றது அதைச் செயல்முறைப்படுத்துபவர்கள் முன்வந்தால் நிலைமை இரு சாராருக்கும் மனவேற்றுமைகளை உருவாக்கிவிடும். பழைய சம்பவங்களையும் நினைவுபடுத்திக்கொள்ளவேண்

(7ம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க நல்லுறவை இந்தியா விரும்புகிறது றீகன் நிர்வாகம் மனதைப் புண்படுத்துகிறது

## பாரத - பாக் எல்லையில் நெருக்கடியையும் யு.எஸ்.ஏற்படுத்தியுள்ளது என்கிறுர்இந்திரா

புதுடில்லி, பெப். 8

**அமெரிக்காவுடன் நல்லுறவை இந்தியா விரும்புகிறது. ஆனுல் அமெரிக்க றீகன் நிர்வாகம் இந்தியாவின் மனதைப் புண்படுத்தும் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறது. இதன்காரணமாக இருநாடுகளுக்குமிடையிலான நல்லுறவு மிகவும் மோசமடைந்து வருகிறது.**

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்துள்ளார்.

இரு அமெரிக்க சஞ்சிகைகளுக்கு அளித்த பேட்டியிலேயே திருமதி காந்தி மேற்கண்டவாறு கூறினர்.

இந்தியாவின் பிரச்னைகளை அமெரிக்கா அலட்சியப்படுத்தியபோதெல்லாம் சோவியத் யூனியன் இந்தியாவுக்கு உதவியுள்ளது. அந்நிலையிலும்கூட இந்திய சோவியத் யூனியனுடன் நெருங்கிஇருக்கவில்லை என்றும் தெரிவித்த திருமதி காந்தி மேலும் கூறியதாவது:

இந்தியாவின் பிரச்னைகளை அமெரிக்கா உரியமுறையில் அறிந்துசொள்ளத் தவறிவிட்டது. இந்தியாவின் நிலையை அமெரிக்கா உரியமுறையில் அறியவில்லை என்பதற்கு பாகிஸ்தானுக்கு ஜெட்விமானங்களை விநியோகம்செய்ய முன்வந்துள்ளது நல்லதொரு உதாரணமாகும்.

அமெரிக்கா பாகிஸ்தானுக்கு 'எப்—16'ரக ஜெட் போர் விமானங்களை விநியோகிப்பதன் மூலம் அதே விமானங்களைக்கொண்டு பாகிஸ்தான் இந்தியாவின் எந்தப்பகுதியையும் தாக்கவழிவகுக்கிறது. அமெரிக்காவின் இந்தச்செயலினுல் இந்திய—பாகிஸ்தான் எல்லைப்புறத்தில் நெருக்கடியும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க அதிகாரிகள் நம்புவதுபோல் சோவியத் யூனியனுடன் இந்தியா நெருங்கியிருக்கவில்லை. அதேவேளையில் அவசியம் ஏற்படும் பட்சத்தில் சோவியத் யூனியன் இந்தியாவுக்குஉதவியுள்ளது. எனினும் ஆப்கானிஸ்தானில் சோவியத் துருப்புக்கள் நிலைகொண்டிருப்பதை இந்தியா தொடர்ந்து எதிர்த்தே வந்திருக்கிறது

### சீன-இந்திய பதட்டம்

சீன-இந்திய பதட்டநிலையைத் தணிப்பது சீனர்களின் மனநிலையைப் பொறுத்தவிடயம் என்றுலும் சீன இந்திய நட்பு இப்போது முன்னேற்றமடைந்துள்ளது என்றும் திருமதிகாந்தி கூறினர். (இ)

## இரசாயன ஆயுதங்களை தடைசெய்யவேண்டும்

மாஸ்கோ, பெப். 8

''ஆயுதப் போட்டியின் மற்றுமொரு அபாயகரமான பாதையைத் தடுக்கவேண்டும் என்பது அமெரிகக மக்கள் உட்படச் சகல நாட்டு மக்களின் கோரிக்கை, இரசாயன ஆயுதங்கள் அனைத்தும் தடைசெய்யப்படல்வேண்டும்'' என்று ,பிராவ்தா' பத்திரிகை எழுதியுள்ளது.

''இரசாயன ஆயுதங்கள் குறித்த சோவியத்யூனியனின் கருத்து மிகத் தெளிவானது. ஏகாதிபத்திய நாடுகளைப் போலல்லாது, இந்த ஆயுதங்களைச் சட்டவிரோதமாக்க வேண்டுமென்று அது இடையருது போராடிவருகிறது. இரசாயன ஆயுதங்களைத் தடைசெய்வதற்கான சகல சர்வதேச மகாநாடுகளுக்கும் ஒரு தடையாக இருப்பது அமெரிக்காவேதான்'' என்றும் அப்பத்திரிகை எழுதியுள்ளது.

இன்று உலகில் அமெரிக்காவிடம்தான் அதிகமான இரசாயன ஆயுதங்கள் உள்ளன. 1,50,000 தொன்களுக்கும் அதிகமான டொக்ஸின் ஆயுதங்களையும் ?து வைத்திருக்கிறது. 50 லட்ச இரசாயன ஆயுத யுனிட்டுகளைக் கொண்டிருக்க அமெரிக்கா விரும்புகிறது. இதற்காக அடுத்த ஐந்து ஆண்டுகளில் 250 கோடி டாலர்கள் செலவழிக்கப்படவுள்ளது, அத்துடன் இரசாயன ஆயுதத் திட்டம் 400—1000 கோடி டாலர்களைக் கொண்டுள்ளது. அமெரிக்கா தனது மண்ணில் மட்டுமல்ல, இதர நாடுகளின் பிரதேசங்களிலும் இந்த இரசாயன ஆயுதங்களைக் குவித்துவைத்திருக்கிறது. ஐரோப்பா இதில் முதலிடம் வகிக்கிறது'' என்றும் 'பிராவ்தா' பத்திரிகை எழுதுகிறது.

## "இலங்கை விஜயம் மிகவும் பயனுள்ளது"

### பாரத ஜனுதிபதி நாடு திரும்பினுர்

புதுடில்லி, பெப். 8

இலங்கையின் சுற்றுப் பயணம் பாரதத்திற்கும் இலங்கைக்குமிடையில் நெருக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக 6 நாள் இலங்கைச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு, இன்று பிற்பகல் நாடுதிரும்பிய பாரத ஜனுதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி தெரிவித்தார்.

விமானநிலையத்தில் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி உப ஜனுதிபதி, அமைச்சர்கள் முப்படையினர் ஜனுதிபதியை வரவேற்றனர். ஜனுதிபதி திரு. சஞ்சீவரெட்டி, இங்கு நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில், இலங்கைவிஜயம் மிகவும் பயனுள்ளது என்று தெரிவித்தார்.

இருநாடுகளின் நட்புறவும், மேன்மேலும் வலுவடையும் என்றும் அவர் தெரிவித்தார் தமது பயணம் இரு நாடுகளையும் மிக நெருக்கமுற செய்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (க)

## கடந்த 4 ஆண்டுகளில் 45,000 இலங்கைபெண்கள் வெளிநாடுகளில் வேலை

(கொழும்பு)

கடந்த நானகு ஆண்டுகளில் வெளிநாடுகளில் சுமார் 45,000 இலங்கை பெண்கள் வேலைவாய்ப்பை பெற்று சென்றுள்ளனர்.

தொழில் திணைக்களம், அரசு, நிர்வாக வேலைகளுக்கே, தொழில் திணைக்களம் பெண்களை தெரிவுசெய்து அனுப்பி வைத்துள்ளது. பெண்களை வெளிநாடுகளில் பணிப்பெண்களாக அனுப்புவதில் தொழில் திணைக்களம் ஈடுபடவில்லை.

1980ம் ஆண்டு 8000 பேர் மத்திய கிழக்கில் வேலைவாய்ப்பைப்பெற்றனர். கடந்த ஆண்டு வெளிநாடுகளில் 17,000 பேர் வேலைபெற்றனர். இவர்களில் 1177 பேர், தொழில் நிலையமூலமும், மற்றையோர் முகவர் நிலையம் மூலமும் வெளிநாடு சென்றனர். (க)

## கிராஞ்சிக்குளக்கரையில் பனம்பொருள் ஆய்வுநிலையம்

(புலோலி)

பாரிய அளவிலான பனம் பொருள் அபிவிருத்தியை மேற்கொள்ளும் முகமாகப் பனம் பொருள் அபிவிருத்திச்சபை பனம்பொருள் ஆராய்ச்சி நிலையம், பரிசோதனை நிலையம் ஆகியனவற்றை நிறுவ உள்ளது.

இதற்கான நடவடிக்கைகளைப் பனம்பொருள் அபிவிருத்திச்சபைப் பொதுமுகாமையாளர் கலாநிதி எஸ். மோகனதாஸ் துரிதமாக மேற்கொண்டுவருகின்றுர்.

இந்த ஆராய்ச்சி நிலையமும், பரிசோதனைக் கூடமும் பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைய உள்ளள. இந் நிலையங்களை நிறுவுவதற்காசப் பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராஞ்சிக் குளக்கரை என்னும் எண்பது ஏக்கர் முடிக்குரிய நிலமும், கறிக்காய் என்னும் 180 ஏக்கர் நிலமும் பெறப்பட உள்ளன.

இக்காணிகளைப் பனம் பொருள் அபிவிருத்திச்சபைக்குப் பெறுவதற்கெனச் சபையின் பொதுமுகாமையாளர் கலாநிதி மோகனதாஸ் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுத் தலைவருடன் தொடர்புகொண்டுள்ளார்.

கிராஞ்சிக்குளக் கரையில் ஆராய்ச்சி நிலையம் அமையும் என்றும், கறிக்காயில் பரிசோதனைக்கூடமும் மாதிரிப் பனம் பண்ணையும் உருவாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் 5-வது நினைவுதினம் இன்று

(யாழ்ப்பாணம்)

அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் 5வது நினைவு தினம் இன்று செவ்வாய்க் கிழமை இடம்பெறுவதை யொட்டி வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், கொழும்பிலுமுள்ள வணக்கத்திற்குரிய தலங்களில் விசேட பூஜை, ஆராதனை, அர்ச்சனை, அபிடேகம் ஆகியன நடையெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையொட்டி பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் இன்று பிற்பகல் 5 மணிக்கு விசேட அபிடேக ஆராதனை இடம்பெறும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை ஒன்றில் சட்டத்தரணி மோதிலால் நேரு, சிங்கள சேவை ஒன்றில் திரு. நிமால் கருணுதிலக ஆகியோர் இன்று அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் நினைவுச்சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். (வெ)

## அரசியல் கொலைகள்

லண்டன், பெப். 8

எல்சல்வடோரில் கடந்த ஆண்டு 6 ஆயிரம் பேர் அரசியல் காரணங்களுக்காகக் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது.

80ம் ஆண்டைவிட இரட்டிப்பான தொகை இதுவென்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## தேள் விஷத்தை ஆராயும் விஞ்ஞானிகள்

மாஸ்கோ, பெப். 8

பாகூவை சேர்ந்த விஞ்ஞானிகள், மருந்து தயாரிப்பாளர்களுக்கு மிகவும் பயன்படும் தேள் விஷத்தைச் சேகர்க்கும் வழிமுறையைத் தெரிந்து கொண்டுள்ளனர்.

தேளைச்சீண்டி விடுவதற்காக மின் அதிர்வுகளை பயன்படுத்தித் தேள் விஷயத்தை சேகரிக்கிறுர்கள்.

விஷத்தின் ஒரு பாகம் ஒரு கிராமின்பலநூறு பங்கில் ஒரு புங்கு எடையுள்ளது. இந்த வருடத்தில் ஐந்து கிராம் உலர்ந்த விஷத்தை சேகரிக்கவும் அடுத்த வருடம் 15 கிராம் சேகரிக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

இந்த அளவு விஷத்தை சேகரிக்க 20ஆயிரம் தேள்கள் தேவையாகும். இந்த விஷம் பற்றிய ஆய்வில் சோவியத் யூனியன் முழுவதிலும் உள்ள ஆராய்ச்சிக் கழகங்கள் ஈடுபட்டுள்ளன. புதிய மருந்துகளைத் தயாரிப்பதற்காக இந்த ஆராய்ச்சி நடைபெறுகிறது. நரம்புக் கோளாறுகளைச் சுகப்படுத்த இந்த விஷம் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## படைப்பலத்தைப் பெருக்குவதே றீகனின் முக்கிய கொள்கை

றியாத், பெ 8

அமெரிக்க படைபலத்தைப் பெருக்குவதுதான் றீகன் நிர்வாகத்தில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இவ்வாறு அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு.வெய்ன் பேகர் தெரிவித்தார்.

சவூதிஅரேபியாவில் சுற்றுப் பயணம் செய்யும் திரு. பேகர் மேலும் கூறியதாவது:

அமெரிக்க பட்ஜட்டில் பாதுகாப்புச் செலவுகளுக்கு அதிக பணம் ஒதுக்கப்பட்டுள்ளதை அமெரிக்கப் பாரளுமன்றம் எதிர்க்கும் என்பது உண்மை அதற்காக நாம் அமெரிக்க பாதுகாப்பை நிராகரித்துவிட முடியாது'

பாதுகாப்புச் செலவினங்களை அதிகரிப்பதன் மூலம் அமெரிக்க எல்லைகளைப் பாதுகாக்கவே றீகன் நிர்வாகம் இதனைச் செய்துள்ளது.

## அமெரிக்க 'பட்ஜட்' 'டாஸ்' கருத்து

மாஸ்கோ, பெப். 8

''அமெரிக்க வின் பட்ஜட் ஒரு போர் பட்ஜட்ஆகும். இந்த பட்ஜட் அணு ஆயுதப் போர், உலகை உறுதவைக்கிறது'' என்று சோவியத் பத்திரிகயான 'டாஸ் அமெரிக்காவின் பட்ஜட் குறித்து கருத்துத் தொவித்து ளது (இ வெ

## யாழ். நகரில் 'நிஸ்கோ' பிரிவு

(கரவெட்டி)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினுல் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நிஸ்கோ' பிரிவு யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தினையில்

(4ம் பக்கம் பார்க்க)

# கொள்ளைகள் துப்புத்துலக்கப்படுகின்றன

# சந்தேகநபர்களுக்கு ரிமாண்ட்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி கொள்ளைதொடர்பாக விசாரணை நடத்திய பொலிசார் சுமார் 22.000 ரூபா பெறுமதியான நகைகளை மீட்டுள்ளனர்.

யாழ். நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் சந்தேக நபர்களான அந்தோனி தர்மராசா, செல்வராசா ரவிந்திரராசா ஆகியோர் ஆஜர் செய்யப்பட்டனர்.

இன்ஸ்பெக்டர் கே. சிறிதரன் தலைமையில் சென்ற பொலிஸ் கோஸ்டி சந்தேக நபர்களை கைது செய்து புலன் விசாரணையை மேற்கொண்டதைத் தொடர்ந்து சில புதிய தகவல்கள் கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது.

திருநெல்வேலி 98ஆயிரம் ரூபா நகைக்கடை கொள்ளை குரும்பசிட்டி, 26 ஆயிரம் ரூபா கொள்ளை குரும்பசிட்டி 16 ஆயிரம் ரூபா கொள்ளைகளில் சந்தேக நபர்கள் சம்பந்தப்பட்டவர்கள் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் இம்மாதம் 19ம் தேதிவரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மற்றும் 5 சந்தேகநபர்களான கனக சபாபதி ஜெகதீஸ்வரன் வேலுப்பிள்ளை இராசலிங்கம், செபமாலை புலேந்திரன், சங்கர் சிவராசா, சாள்ஸ் மகேந்திரன் ஆகியோர், விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (மா)

## யாழ். நகரில்....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதம் 15ம் திகதி முதல் இயங்கவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர்களையும், யுவதிகளையும் தொழிற்துறைகளில் ஈடுபடுத்தி வருமானம் பெறக்கூடிய வழிக்ளில் அவர்களை வழிநடத்திச் செல்வதே இந்த 'நிஸ்கோ' பிரிவின் நோக்கம் என்றும் இப்பிரிவில் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்பவர்களுக்கு மாத்திரம் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நிதிஉதவியுடன் இம் மாவட்டத்திற்கு ஏற்ற சிறந்த தொழிற்றுறைகளை கூட்டுறவு ரீதியில் ஏற்படுத்திக் கொடுக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் யாழ். தேசிய இளைஞர் சேவைமன்ற உத்தியோகத்தர் செல்வி.எஸ். மகேஸ்வரி தெரிவித்தார்.

## "குடிசை கைத்தொழிலில் பெண்கள் ஈடுபட்டு வருமானம் ஈட்டவேண்டும்"

### உலகவிஷன் உதவிப்பணிப்பாளர் அறிவுரை

(புலோலி)

''நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பெண்களின் பங்கு முக்கியமானது. கிராமங்களில் பல்வேறு குடிசைக்கைத் தொழிற்துறைகளிலும் ஈடுபடுவதின் மூலம் பெண்கள் அதிக வருவாயை ஈட்டமுடியும்'' என்று உலக விஷன் ஸ்தாபன உதவிப்பணிப்பாளர் திரு. சம்ரவிக்கிரமசிங்கா குறிப்பிட்டார்,

புலோலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இக் கருத்தரங்கு சங்கத்தலைவி செல்வி மகேஸ்வரி சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

திரு. சமரவிக்கிரமசிங்கா தொடர்ந்து பேசுகையில்கூறியதாவது:

''கிராம அபிவிருத்தியில் எமது ஸ்தாபனம் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது, பின்தங்கிய கிராமங்களையும், மக்களையும் முன்னேற்றி அவர்களுக்குச் சுபீட்சமானவாழ்வைத் தேடிக் கொடுப்பதே எமது இலட்சியமாகும்.

''பெண்கள்கிராமஅபிவிருத்தியில் அதிக ஈடுபாடுகொண்டு செயற்படவேண்டும். இதற்கு விஷன் நிறுவனம் எந்தநேரமும் தேவையான உதவிகளை வழங்கி ஊக்கமளிக்கத் தயாராக உள்ளது.

''இக்குறிக்கோளை நிறைவேற்றும் முகமாகவே பெண்களையும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுத்தி ஊக்கமளித்து வருகின்றோம். கால்நடை வளர்ப்பின் மூலம் வீட்டில் இருந்தபடியே அதிக வருமானத்தை ஈட்டமுடியும். கால்நடை வளர்ப்புக்கென எமது நிறுவனம் வழங்கும் நிதியுதவிகளைத் தகுந்தமுறையில் பயன்படுத்தினால் அதிக நன்மைகளைப்பெற்றுக் கொள்ளமுடியும்.

சங்கச் செயலாளர் செல்வி கிருஷ்ணவேணி வீணுகோபால் உரையாற்றுகையில், ''எமது சங்கம் இப்பகுதி இளம் பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதுடன் கிராமிய அபிவிருத்தியையும் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டுவருகின்றது. எமதுபகுதியில் கால்நடைவளர்ப்பை ஊக்குவிப்பதற்கு உலக விஷன்ஸ்தாபனம் நிதியுதவி வழங்கியது எமக்குக்கிடைத்த வரப்பிரசாதமாகும். கால்நடைவளர்ப்பு, விவசாயம் ஆகியதுறைகளில் ஈடுபட்டு எமது பகுதி அபிவிருத்திகளையும் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டியது முக்கியமாகும்'' என்றார்.

கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. கே. சிவசுப்பிரமணியம். இளைப்பாறிய கிராம அபிவிருத்தி அத்தியட்சகர் திரு. வீ. கே. சுப்பிரமணியம் யாழ். மாவட்ட செயற்திட்ட உத்தியோகத்தர் திரு. விஜயசுர்தரம் கிராமசேவை அலுவலர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை ஆகியோரும் உரையாற்றினர்.

உலக விஷன்ஸ்தாபன உதவிப்பணிப்பாளர் திரு. சமரவிக்கிரமசிங்கா இம் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டுத் தோட்டத்தை பார்வையிட்டுப் பாராட்டினார். இவ்வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்கும் முகமாக நீரிறைக்கும் இயந்திரம், மருந்து தெளிகருவி ஆகியனவற்றை உலக விஷன் ஸ்தாபனம் வழங்கவுள்ளதாகவும் அறிவித்தார்.

உலக விஷன் தாபனம் இம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கோழி வளர்ப்பை ஊக்குவிக்குமுகமாக வழங்கிய 5,000 ரூபாவையும் சங்க அங்கத்தவர்களுக்கு தலா 250 ரூபா வீதம் வழங்கினார். (அ)

## ரூ.60,000 ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

கச்சாய் கைத்தொழில் அபிவிருத்திமண்டபம் அமைப்பதற்குச் சாவகச்சேரி எம்.பி. திரு. வ. ந. நவரத்தினம் தமது நிதியிலிருந்து ரூபா 60,000 ஒதுக்கியுள்ளார்.

இம்மண்டப கட்டிட வேலைகளுக்கான நடவடிக்கைகளை சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைசாசா மேற்கொண்டுள்ளார்.

## நூல் நிலையத்திற்கு ரூ. 75,000 ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

நீண்டகாலமாகநாவற்குளிக் கிராம சபைப் பிரதேசத்தில் பொது நூல்நிலையமொன்று அமைக்கப்பட வேண்டுமென இத் தொகுதி எம். பி. யை மக்கள் கேட்டிருந்தார்கள்:

இவர்களது கோரிக்கைக்கிணங்க சாவகச்சேரி எம்.பி. திரு. வ. ந. நவரத்தினம் இம்முறை பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 75,000 ரூபாவை பொது நூல் நிலையம் அமைப்பதற்கு ஒதுக்கியுள்ளார்.

## அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள்

(புலோலி)

புலோலி மேற்கு கிராம அபிவிருத்திச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்; க. நடனசபாபதி, உப தலைவர்; செ; சிவராசசிங்கம். செயலாளர்: பா. இரகுநாதன், உப செயலாளர்: சு. ஞானப்பிரகாசம், பொருளாளர்: ச. செல்வராசா, உப பொருளாளர்: செ. விநாயகமூர்த்தி, செயற்குழு உறுப்பினர்கள்: க. தங்கராசா, சி; சோமபாலன், க. சிவஞானசுந்தரம், மா. குகதாஸ், மா. இரத்தினசபாபதி.

## திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமையை மீளப்பெற பெரும் மகஜர் தயாராகிறது

(கொழும்பு)

சுதந்திரக்கட்சி தலைவியும் முன்னாள் பிரதமருமான திருமதி சிறிமாமோ பண்டாரநாயக்காவினது குடியியல் உரிமைகளை மீண்டும் வழங்குமாறு ஜனாதிபதியைக் கோரும் பெரும் மனுவொன்று தற்போது தயாராகி வருவதாகத் தெரியவருகின்றது.

மகஜர் வடிவில் உருவாகவிருக்கும் இம் மனுவில் சகல துறைகளையும் சார்ந்த உள்நாட்டுப் பிரமுசர்களும், வெளிநாட்டுப் பிரமுகர்களும் கைச்சாத்திட விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மகஜரைத் தயாரிக்கும் பொறுப்பு மூன்று முக்கிய சட்டத்துறை சார்ந்த வர்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாடுகளுக்குச் சென்று மேற்படி மகஜருக்கு ஆதரவு தேடவும் இவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகின்றது.

மகஜர் தயாரிப்பதில் ஆர்வங்காட்டி வருவோர் இதுபற்றித் தெரிவிக்கையில் திருமதி பண்டாரநாயக்காவின் கட்சியொன்றே அரசாங்கக்கட்சிக்கு சமானமாக இந்நாட்டில் ஜனநாயகப் பாரம்பரியங்களை மதித்து வருகின்றதென குறிப்பிட்டுள்ளனர். (கி)

## "ஒடுக்கப்பட்டோரின் சமூக அந்தஸ்தை உயர்த்த திட்டங்கள் வேண்டும்"

(புலோலி)

''தமிழ் இனம் இன்று தமது சுயநிர்ணய உரிமைக்தாகப் போராடுகின்றது. இவ்வேளையில் அவர்களின் ஒரு அங்கமாகிய ஒடுக்கப்பட்ட தமிழ்மக்கள் தமிழ் மக்களிடையே சமமாக மனித உரிமைகளைப் பெற்று வாழ முடியாத நிலையில் உள்ளது வேதனைக்குரியது''

இவ்வாறு சட்டத்தரணி மு. சிவகுருநாதன் பருத்தித்துறை புலோலி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கக்கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கு பொலிகண்டி வெல்லத் தொழிற்சாலைக்கு அருகாமையில் புலவர் சீனித்சம்பி தலைமையில் நடைபெற்றது.

சட்டத்தரணி திரு. சிவகுருநாதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

கணிசமான அளவு ஆலயங்கள் தேநீர்க்கடைகள் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்குத் திறந்து விடப்பட்ட போதும் இன்னும் தமிழ் மக்களிடையே சமத்துவம் நிலவாததற்குக் காரணம் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களுக்கு அந்தஸ்து இல்லாமையேயாகும். போதிய கல்வி வாய்ப்பு வேலை வசதி, பொருளாதாரம், குடியிருக்கச்சொந்த வீடுநிலம் இல்லமை ஆகியனவேசிறுபான்மை சமூகத்தவர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளன,

''உண்மையில் தமிழ்மக்களிடையே சமத்துவம் ஏற்படவேண்டுமாயின் குறுகிய காலத்தில் ஒடுக்கப்பட்டவர்களின் சமூக அந்தஸ்தை உயர்த்த உருப்படியான திட்டங்கள் இந்தியாவில் ஹரிஜனங்களுக்குச் செய்யப்படுவது போலச் செயற்படுத்தப்பட வேண்டும்.

புலோலி பருத்தித்துறை தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. சிவப்பிரகாசம், ஆசிரியர் திரு. சதானந்தன் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. சோ. சிவராசா ஆகியோரும் பேசினர். (அ)

CENTRIC

செண்ட்றிக் விவசாய பம்ப்.



● உலகப் புகழ் ரூபின் பெட்ரல்/மண்ணெண்ணெய் அல்லது யன்மார் டீசல் எஞ்சின் பொருத்தியது.
● நிகர் நிற்க முடியாத எரிபொருட் சிக்கனம். தனித்துவமான தன்னியக்க எரி பொருள் மாற்றும் விசை.
● இடம் மாற்றும் வசதி கொண்ட பாரம் குறைந்தது.
● நிலைத்து நிற்பதற்காக வார்ப்பிரும்பிலும் பித்தளையிலும் உருவானது:
● செண்ட்றிக் - 30 வருடங்களுக்கு மேல் 60,000 பேர் நம்பிப் பாவிப்பது.

விலை: ரூ. 4,750/- முதல்.
1½", 2", 3", 4" ரகங்களில் கிடைக்கும்.

ஜினசேன லிமிட்டெட்,
4, உஸுப்பிட்டியா வீதி.
கொழும்பு 2.
தொலைபேசி: 26558/9

அடுத்த ஆண்டில்

# யாழ். பல்கலைக்கழகத்திற்கு

## ரூ. 2 கோடிக்கு மேல் ஒதுக்கப்படும்

### மானியக்குழுத் தலைவர் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

1983ல் யாழ். பல்கலைக்கழகத்துக்கு நிதி ஒதுக்கீடாக 2 கோடி 10 லட்சத்து 60 ஆயிரம் ரூபா ஒதுக்கப்படலாமெனவும், இந்நிதியிலிருந்து மாணவர் நிலையம் அமைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுமெனவும் உயர்கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஸ்டான்லி கல்கபே யாழ். பல்கலைக்கழகத்தில் தம்மைச் சந்தித்த யாழ்.பல்கலைக்கழக மாணவர் அவைக்குழுவினரிடம் தெரித்தார்.

மாணவர் அவைத்தலைவர் திரு. கே. எஸ். இராசநாயகம் தலைமையில் அவைச் செயலாளர் திரு. எஸ். ஸ்ரீசற்குணராஜா, திரு. வாளர்கள் கே. ரி. சிவகுமார், வி. சுந்தரேசன் முருகவேள் ஆகியோரைக் கொண்டகுழு பேராசிரியர் கல்பகேயைச் சந்தித்துப் பேசியது. இப் பேச்சுவார்த்தைகளில் உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனும் கலந்து கொண்டார்.

மாணவர் அவை பேராசிரியர் கல்பகேயிடம் சமர்ப்பித்த கோரிக்கைகள் வருமாறு:

வர்த்தகபீடம் அமைப்தற்கான அறிக்கை பல்கலைக்கழக அவையிடமிருந்து கிடைத்ததும் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு 24 மணித்தியாலமும மின்சாரம் பாவிக்கக்கூடியதான ஜெனரேட்டர் ஒன்று கொள்வனவு செய்யநடவடிக்கை எடுக்கவேண்டும்.

''அடுத்ததவணைக்குள் தற்போதைய நூலகக்கட்டிடத்தின் ஒருபகுதியாவது இயங்கவும், விஞ்ஞானபீடத்துக்கான தேநீர்ச்சாலை நிறுவவும் நடவடிக்கை எடுக்க்வேண்டும்''

இக்கோரிக்கைகளை நிறைவேற்றித்தருவதாக பேராசிரியர் உறுதியளித்துள்ளார். (மா)

## நூல்நிலையம் இல்லை

(மண்டைதீவு)

யாழ். அபிவிருத்தி சபையின் நாரந்தனை உபபணிமனை எல்லைக்குள் பொது நூல்நிலையம் இல்லாததால் இப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் நூல்நிலையத்தைத்தேடி தூர இடங்களுக்கு செல்லவேண்டி யிருக்கின்றது.

## பருத்தித்துறை ப. நோ. கூ. ச. இயக்குனர்சபை

(புலோலி)

பதுத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

க. துரைராசா (பருத்தித்துறை), வே. முத்துக்குமாரசாமி (சவனுய்), வி. இராசரத்தினம்(தும்பளை), வி.பொன்னு (குடத்தனை), ந. திருஞானசம்பந்தபிள்ளை (இன்பருட்டி), வ. இராமச்சந்திரன் (பொலிகண்டி) ஆ. தியாகராசா ஐயர் (கெருடாவில்).

## துன்னலையில் புத்தாண்டு கலைவிழா

(புலோலி)

துன்னலை தெற்குக் சிராம சேவை அலுவலர் பிரிவில் புத்தாண்டு தினத்தன்று மாபெரும் விளையாட்டு விழாவும் கலைவிழாவும் நடாத்தப்பட உள்ளன.

இப் புத்தாண்டு விழாவில் மாட்டுவண்டிச்சவாரிப் போட்டியும், சைக்கிளோட்டப் போட்டி. மரதனோட்டம், ஆகியனவும் முக்கிய அம்சங்களாக இடம் பெறும்.

புத்தாண்டு விழாவிளையாட்டுக்குழு நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்;

போஷகர்: திரு. செ. அ. ஞானச்சந்திரன் (கிராமசேவை அலுவலர், தலைவர் திரு. க பாலசுட்பிரமணியம், செயலாளர்: திரு. நா. செல்வச்சந்திரன் பொருளாளர்: திரு. இ. இராமதாஸ். (அ)

## விறகுதட்டுப்பாட்டை நீக்க முயற்சி

(பண்டத்தரிப்பு)

சங்கானையில் எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்குமுகமாக எரிபொருள் விற்பனைநிலையம் ஒன்றை சங்கானையில் ஆரம்பிப்பதற்கு சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. விறகுபெறுவதிலுள்ள சிரமத்தை போக்குமுகமாகவிறகு விற்பனை நிலை ஒன்றை நிறுவுவதற்கும்சங்கம் திட்டமிட்டுள்ளது. சங்கத் தலைவர் திரு. செ. தங்கராஜா தலைமையில் நடைபெற்ற இயக்குனர்சபைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன,

## பாலர்பாடசாலை விழா

(சாவகச்சேரி]

இலங்கைக் கிராமிய மீளமைப்பு நிறுவனத்தின் ஆதரவில் செம்பியன் பற்று வடக்கு பாலர் பாடசாலை வருடாந்த விழா பங்குக்குரவர் அருட்திரு பயஸ் இருதயதாஸ் தலைமையில் 20 திகதி நடைபெற இருக்கிறது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக இந்நிறுவனத்தின் தலைவர் திரு. பீ. கே. பொன்னம்பலம் கலந்து கொள்கிறுர்.

செல்வி காஞவாசன், பாடசாலைப் பொறுப்பதிகாரி செல்வி இராசேஸ்வரி அப்பையா ஆகியோரும் விழாவில் கலந்து கொள்வார்கள்.

வட்டு. கடற்றெழில் கூட்டுறவுச்சங்கம்

## கடலட்டை ஏற்றுமதியில் 62 லட்சம்ரூபாய் வருமானம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத்தொகுதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் சிங்கப்பூருக்கு நேரடியாக கடலட்டைகளை ஏற்றுமதி செய்ததன் மூலம் கடந்த 1981ம் ஆண்டில் 62 இலட்ச ரூபாவை அந்நியச்செலாவணியாக பெற்றுள்ளது இவ்வாண்டில் இதைவிட கூடுதலான கடலட்டைகளை சங்கம் சேகரித்து அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக சங்கத்தின் பொது முகாமையாளர் திரு. செ.சண்முகசுந்தரம் இது பற்றிதகவல் தருகையில் தெரிவித்தார். ஹொங்கொங் நாட்டிற்கும் கடலட்டைகளை இவ்வருடம் ஏற்றுமதிசெய்யக் கூடிய சாத்தியக்கூறுகள் ஏற்பட்டிருப்பதாகவும் திரு. சண்முகசுந்தரம் மேலும் தெரிவித்தார்.

## "பெற்ற சுதந்திரத்தை பேணிகாக்கவேண்டும்"

(பண்டத்தரிப்பு)

''எமது அயல் நாடான இந்தியா பலதியாகங்களைச்செய்து நீண்டகால அகிம்சைப் போராட்டத்தின் பயனுக சுதந்திரம் பெற்றது. உலகின் பல நாடுகள் இரத்தம் சிந்தி போராட்டங்கள் நடாத்தி சுதந்திரத்தைப்பெற்றுள்ளன. எமதுநாட்டிற்கு அமைதியான முறையில் கிடைத்த சுதந்திரத்தை மக்கள் அனைவரும் ஐக்கியப்பட்டு பாதுகாக்கவேண்டும்'' இவ்வாறு வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ செந்தில்வடிவேல் சங்கானையிலுள்ள உதவி அரசாங்கஅதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற சுதந்திரதின வைபவத்திற்கு தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். சங்கானை முருகமூர்த்தி ஆலயத்தில் நடைபெற்ற விசேடபூசையைத்தொடர்ந்து அலுவலக கட்டிடத்தில் தேசியக் கொடியை திரு. செந்தில் வடிவேல் ஏற்றிவைத்தார். கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. கே. பாலகிருஷ்ணன் உட்பட பலர் இவ்வைபவத்தில் உரையாற்றினுர்கள்.

## சுவிசேஷக் கப்பல் குழுவினர் யாழ். வருகின்றனர்

(அரியாலை)

'லோகோஸ்' சுவிசேஷக் கப்பல் குழுவினர் தமது சுவிசேஷ வேலையை மேற்கொண்டு

(7ம் பக்கம் பார்க்க)

''ஹோமியோபதி தொழிலாளர் பதிவு:

## யாழ்ப்பாணத்திலும் பரீட்சைகளை நடாத்துவதற்கு வழிசெய்க''

(யாழ்ப்பாணம்)

ஹோமியோபதி தொழிலர்களைப் பதிவுசெய்வதற்கென அண்மையில் நடாத்தப்பெற இருக்கும் எழுத்துப்பரீட்சைகளையும், நேர்முகப் பரீட்சைகளையும் அநேகவிண்ணப்பதாரிகளின் வசதிக்கேற்ப யாழ்ப்பாணத்திலும் ஓர் இடத்தில் நடத்துமாறு இலங்கைஹோமியோபதி பேரவையைக்கேட்டுக்கொள்வதென வடபகுதி ஹோமியோபதி சங்கத்தின் 23 வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. யாழ்.நாவலர்வீதி ஐந்து சந்தியில் டாக்டர் ஏ.கிருஷ்ணசாமி தலைமையில்நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு:

''இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் பரந்து தொழிலாற்றும் ஹோமியோபதி வைத்தியர்களின் மருந்து பற்ருக்குறையை நீக்கும் வண்ணமும் அவர்களுக்குத் தேவைக்கேற்ப மருந்துகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளும் வண்ணமும், ஹோமியோபதி பார்மசி ஒன்றை உடனடியாக நிறுவும்படி இலங்கை ஹோமியோபதி பேரவையைக் கேட்டுக் கொள்வது.

இலங்கை அரசாங்கம் தற்போது ஹோமியோபதியை ஒரு வைத்திய முறையாக அதனைப் பரப்புவதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த வைத்திய முறையைப் பொதுமக்களிடையே பரப்புவதற்கு யாழ்ப்பாணத்தில் மாநகராட்சி மன்றத்தின் மேற்பார்வையில் ஒரு ஹோமியோபதி சிகிச்சை நிலையத்தை இலவச வைத்திய சேவையுடன் ஆரம்பிக்குமாறு யாழ்.மாநகர சபையைக் கேட்டுக் கொள்வதுடன் இச்சங்கம் சார்பிலேயே இந்த இலவச ஹோமியோபதி சிகிச்சை நிலையத்தை நடாத்துவதற்கு ஏதுவாக ஒருகட்டடத்தையாவது தந்துதவுமாறு இச்சங்கம் கேட்டுக்கொள்கின்றது''.

நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, உபதலைவர்: டாக்டர் எஸ். மோசஸ், செயலாளர்: டாக்டர் எம். வேலுப்பிள்ளை, உதவிச்செயலாளர்: டாக்டர் செல்வி வி. நிர்மலாதேவி, பொருளாளர்: டாக்டர் எஸ். சிவநேசன், உறுப்பினர்கள் டாக்டர்கள் எம். ஏ. எஸ். அஹமது லெவ்வை, ஆர். சுப்பிரமணியம், எஸ். குகநாதன், செல்வி எஸ். தனபாலசரஸ்வதி, எஸ். ரி. புவிராசன், எவ். ஏ. ராகல், பி. மகாலிங்கம், நாகூர் மொஹிதீன் பாவா, டி. ஏ. மத்தியூஸ். (அ)


BANK OF CEYLON இலங்கை வங்கி

# இலங்கை வங்கி

தனது

# நெல்லியடிகிளையை

(நெல்லியடி-திக்கம் றேட் நெல்லியடி)
(யாழ்ப்பாண மாவட்டம்)
1982-ம் ஆண்டு பெப்புரவரி மாதம் 10-ந் திகதி
புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு
ஆரம்பித்துவைக்குமென மகிழ்ச்சியுடன்
தெரிவிக்கிறது.

இக்கிளை

## திரு. யூ.பி. விஜேகோன், பா. உ.

யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் அவர்களினுல்
திறந்துவைக்கப்படும்.

## திரு. ரீ. இராசலிங்கம்

உடுப்பிட்டி பா. உ. அவர்களும்
இவ்வைபவத்தில் கலந்துகொள்வார்கள்

எல்லா வாடிக்கையாளர்களும். ஆதரவாளர்களும்
இவ்வைபவத்திற் கலந்துகொள்ளுமாறு
அழைக்கப்படுகின்றனர்.

இலங்கை வங்கி
மத்திய காரியாலயம் யோக் வீதி, கொழும்பு 1
தொலைபேசி: 28521

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
வெலிங்டன் ... சுன்னாகம்
தினசரி: 2.30 6.11 9.15
நூல்வேலி

கடைசி வாரம்
ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
நீல மலர்கள்

மனோகரா (யாழ்ப்பாணம்)
10—30, 2—15, 4—45, 7—00, 9—30
FIVE ANGRY WOMEN
(கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

சாந்தி (யாழ்.நகர்) 10—30, 2—30, 6—15, 9—45
12-2-82
'குரு' கடைசி தினமும் 151வது நிறைவு தினமும்
13th "THREE THE HARD WAY"

ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் தினசரி 10:30, 2:30, 6:00, 9:30
யாழ். நகர் சிவாஜி — ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா
(புதியபிரதி)

Regal Cinema தினசரி 10—30, 2—15,
(Jaffna) Tele. 360. 4—30, 7—00, 9—30
Burt Lancaster, Alain Delon
SCORPIO

12-2-82 முதல்
தனிமரம்

வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
சுதாகர், ராதிகா நடித்த
அன்னப்பறவை

Rajah
JAFFNA
LOVE BUG'S RETURNS
Daily 10—30, 2—00, 4—30, 7—00, 9—30
WALT DISNEY
Present
HERBIE GOES TO MONTECARLO
(Color by Technic
For School Children Contact Management

WINDSOR
(JAFFNA)
Daily 5 Shows
Grand Gala Release
'Airport '80 – The Concorde'
Starring: Alain Delon, George Kennedy
Susan Blakely
இரு மடங்கு ஒலி வேகத்தில் செல்லும் 'கொங்கோட்' விமானம் பாரிஸ் நகரத்திற்குத் தனது கன்னிப் பயணத்தைத் தொடங்குகின்றது. அதிவிசேஷ பயிற்சி, அனுபவம், ஆற்றல் மிக்க விமானிகள் அதைச் செலுத்துகின்றார்கள் திடீர் தாக்குதலினால் பிரயாணிகளின் உயிர்கள் ஊசலாடுகின்றன. விமானிகள் எப்படி இதைச் சமாளிக்கின்றார்கள் என்பதை வெண் திரையில் காண்க.

# சீர்கேடு

(மண்டைதீவு)

வேலணை தன்னியக்கத் தொலைபெசிப் பரிவர்த்தனை நிலையம் அடிக்கடி பழுதடைந்து வருவதால் இப்பகுதியில் உள்ள அரசாங்க அலுவலகங்களிலும், தனியார் வர்த்தக நிலையங்களிலும் தொலைபேசி தூங்கிக்கொண்டே இருக்கிறது.

இது குறித்துக் காவலூர் எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்திடம் இப்பகுதி மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

நாற்றுப்பயிர்களுக்கு

# பனை ஓலைக்குட்டானைப் பயன்படுத்த நடவடிக்கை

(புலோலி)

சிறிய நாற்றுக் கூடுகளுக்குப் பொலித்தீன் உறைகளைப் பாவிப்பதற்குப் பதிலாக பனை ஓலைக் குட்டான்களைப் பயன்படுத்தும் திட்டம் விரைவில் செயற்படுத்தப்பட உள்ளது.

இதற்கான பரீட்சார்த்த நடவடிக்கைகளைப் பனம் பொருள் அபிவிருத்திச் சபை மேற்கொண்டு வருகிறது.

இதுவரை காலமும் நாற்றுக் கூண்டுகள் போடுவதற்குப் பொலித்தீன் உறைகளே பாவிக்கப்பட்டுவந்தன. இப் பொலித்தீன் உறைக்குப் பதிலாகப் பனைஓலைக் குட்டானைப் உபயோகிக்கலாம் என்றும், இதன்மூலம் விவசாயிகள் பெரும் பயன் அடைய முடியும் என்றும் கண்டு அறியப்பட்டு உள்ளது.

பனம் பொருள் அபிவிருத்திச்சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். கோகுலதாசன் இது சம்பந்தமாகப் பரந்தன் (தோட்டம் நடுகைப் பகுதி) உதவி விவசாய பணிப்பாளருடன் தொடர்பு கொண்ட போது மண்ணால் நிரப்பப்பட்ட பனைஓலைக் குட்டானில் பாவிக்கும் தன்மையும், தனிக் குட்டானின் விலையும் திருப்திகரமாக இருந்தால், நாற்றுக்களுக்குப் பனை ஓலைக் குட்டானைப் உபயோகிப்பதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மண்ணால் நிரப்பப்பட்ட ஓலைக் குட்டானின் பாவிக்கும் தன்மை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# பிரதேச அபி. அமைச்சருக்கு பண்டிதர் கேள்வி முன்னறிவித்தல்

[யாழ்ப்பாணம்]

இம்மாதம் 10—ந் திகதி பாராளுமன்றம் கூடும்போது ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் எழுத்துமூல விடைக்கான வினாக்களின்போது பிரதேச அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்குக் கேள்வி முன் அறிவித்தல் கொடுத்துள்ளார்.

3—3—81ல் ஆண்டு பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை கொடுத்த மறுமொழியின் தொடர்பாகத் தான் பிரஸ்தாபக் கேள்விகள் கேட்கப்படவுள்ளன.

கேள்விகள் வருமாறு

1. அரசாங்க அதிபர்கள் ஒவ்வொருவரும் அனுப்பிய மறுமொழிகளைகளை அவர் சமர்ப்பிப்பாரா?

2.(i)அரசாங்க அதிபர்களின் தேவைகளை நிறைவேற்றப் பொது நிருவாக அமைச்சுடன் தொடர்பு கொண்டு இன்று வரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவர் கூறுவாரா?

(ii) தமிழ்மொழி உரிமைகளை நடைமுறைப் படுத்துவதற்கு வழிகாட்டல்களைக் கொண்ட வரைவு சுற்றறிக்கையினை அமைச்சரவை அங்கீகரித்துவிட்டதா என்பதையும்,

(iii) இந்த வரவுச் சுற்றறிக்கை எப்பொழுது அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதென்பதையும்,

(vi) இச்சுற்றறிக்கை எப்பொழுது வெளியிடப்படும் என்பதையு அவர் கூறுவாரா? வரவுச் சுற்றறிக்கையின் பிரதியை அவர் சமர்ப்பிப்பாரா? (உ)

கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலை:

# பயிற்சிக்கு முறையே 155, 278 மாணவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் இதுவரை கோப்பாய். பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சிக்கா முறையே 155—278 ஆசிரிய மாணவர்கள் நாடெங்கிலுமிருந்து பயிற்சிக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

கோப்பாய் அரசினர் ஆசிரியர் கல்லூரியில் இந்துசமயம்: 16 பேர், தமிழ்மொழி: 17 பேர், மனையியல். 56 பேர், இசை: 12 பேர், சித்திரம்: 6 பேர். ஆரம்பக கல்வி: 18 பேர், சமூகக் கல்வி: 30 பேர் என்ற ரீதியில் மொத்தம் 155 பேரும்,

பலாலி அரசினர் ஆசிரியர் கல்லூரியில் விஞ்ஞானம்: 69 பேர், கணிதம்; 80 பேர், ஆங்கிலம்: 47 பேர், விவசாயம்: 21 பேர், உடற்கல்வி: 37பேர், கைவினை: 11 பேர், கத்தோலிக்க சமயம்: 13 பேர் என்ற அடிப்படையில் 278 ஆசிரிய மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். (உ)

# நாய்களுக்கு தடுப்பு ஊசி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பொது சுகாதாரப் பிரிவில் கடந்த மூன்று தினங்களாக நடைபெற்ற விசர்நாய்க்கடித் தடுப்பு இயக்கத்தின்போது 1244 நாய்களுக்கு விசர் நோய் வராது தடுப்பு ஊசி மருந்து போடப்பட்டுள்ளது.

# நாய்கள் உஷார்!

(பண்டத்தரிப்பு)

கொழும்பிலிருந்து விசேடமாக வரவழைக்கப்பட்ட நச்சுக்காற்றுக் கொண்ட வான் மூலம் பண்டத்தரிப்புப் பட்டினப் பகுதியிலுள்ள கட்டாக்காலி நாய்கள் யாவும் இம் மாதம் 11, 12ந் திகதிகளில் கொல்லப்படவிருக்கின்றன.

இப்பகுதி மக்கள் தங்களது வீட்டு வளர்ப்பு நாய்களை இவ்விரு தினங்களிலும் தமது வீடுகளில் பாதுகாப்பாகக் கட்டிவைத்திருக்குமாறும், பொது வீதிகளில் நிற்கவிடாது பார்க்குமாறும் பண்டத்தரிப்புப் பிரிவுப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்திச்சபைத் தலைவருக்கு

# கோரிக்கை

(மண்டைதீவு)

யாழ். அபிவிருத்திச் சபையின் வேலணை உப பணிமனையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் பொது நூல்நிலையம் சனி' ஞாயிறு தினங்களிலும் தினமும் இரவு ஏழு மணி வரையும் திறந்துவைக்கப்பட வேண்டுமென்று இப்பகுதி மக்கள், அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஊடாக மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராசாவை கோரியுள்ளனர்.

# இன்றைய பலன்

தை மாதம் 27 ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(9—2—82)

மேடம்: உள்ளப்படுதாவில் உவகைதுள்ளும், பத்திரிகைத் துறையில் தொழில் புரிவோர் பாராட்டுதல்களைப் பெறுவர்.

இடபம்: வித்தையில் வெற்றி காணும், வேண்டியது கிடைக்கும், பொதுமக்கள் தொடர்புடன் புகழ் வந்துசேரும்.

மிதுனம்: நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் இன்று நிவர்த்தியாகும், சுற்றுடலில் மதிப்பு உயரும், பெரிய மனிதர்களின் ஆதரவு பெருகும்.

கடகம்: பொருளாதாரத் துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும், புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும், தொழில் புரியும் இடத்தில் போட்டி மனப்பான்மையைத் தவிர்த்துக்கொள்வது நன்று.

சிங்கம்: ஏக்கத்தின்சாயல் தாக்கும், எதிர்பாராதவிதமாகச் சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரிடும், உள்ளக்கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும், நிதானம் வேண்டும்.

கன்னி: பணமுடை தீரும், பந்துக்களின் தொடர்பு உண்டாகும், குடும்பத்தில் பரவசமான சூழ்நிலை தென்படும்.

துலாம்: தூக்கம் இமைகளை தழுவுவதற்கு மறுக்கும், இதயட படுதாவில் இளமை நினைவுகள் மீண்டும் தலைதூக்கும், ஆனந்தமும் ஆத்திரமும் கலந்த நிலையில் அவதிப்படுவீர்கள்: தெய்வநம்பிக்கை வேண்டும்.

விருச்சிகம்: வாழ்க்கையில் சில முன்னேற்றங்கள் உண்டாகும், வாகன விருத்திக்கு இடமுண்டு, நீர்ப்பாசனபகுதியில் கடமையாற்றுபவர்களுக்கு சிறப்பானதினம், கல்வியில் ஆர்வம் பிறக்கும்.

தனு: மற்றவர்களின் இன்னல்கள் கண்டு இரக்கம் காட்டுவீர்கள், தாராளமான குணத்தின்மூலம் தனமும் செலவாகும், புண்ணிய யாத்திரை உண்டு.

மகரம்: திகைக்கவைக்கும் சம்பவம் இன்று நடைபெறலாம், அரசினரின் ஆத்திரப் பார்வையும் உங்கள் பக்கமும் திரும்ப முடியும், கோஷ்டிச் சண்டையில் மாட்டிக்கொள்ளாதிருக்கவும்.

கும்பம்: களஸ்திரவழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம் பெறும், நீண்ட நாள் பகை இன்று நிவர்த்தியாவதற்கு இடமுண்டு, காதலர்கள் வாழ்க்கையில் பிணைப்புகள் இறுகும். மதிப்பு உயரும், நல்ல நாள்.

மீனம்: இன்னலின் பின்னலால் இதயபாரம் அதிகரிக்கும், முதியவர் ஒருவரின் உடல் நலம் சவலையைத் தரலாம், வைத்திய செலவுக்கும் இடம் உண்டு, சிலர் வாழ்க்கையில் எதிர்பாராத நஷ்டம் ஏற்படலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

மின்விநியோகம்

# இல்லை!

(மண்டைதீவு)

யாழ். அபிவிருத்திச் சபையின் நாரந்தனை உபபணிமனையில் மின்சார உபகரணங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், இப்பகுதி மக்கள் பலர் மின் இணைப்பு வேலைகளுக்கு விண்ணப்பித்தும் பல மாதங்களாகியும் இவர்களுக்கு மின்விநியோகம் வழங்கப்படவில்லை.

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

வீடு, கிணறு, மில் அடங்கிய இரண்டு ஏக்கர் வளவுக் காணியும் மூன்று ஏக்கர் வயல் காணியும் இரண்டிற்கும் நீர்ப்பாசன வசதி உண்டு. நேரில் வரவும். இ. கதிரவேலு, சிவகுமாரிமில் 3 d யூனிற் யோகபுரம், மல்லாவி, வவனிக்குளம். (2167)

இரண்டு சக்கர (Mitsu Bishi Shakti) மிற்சுபிசி சக்தி 10 HP உழவு யந்திரம் பெட்டி, ருெட்டவேற்டருடன் விற்பனைக்கு உண்டு. டாக்டர் தி. கங்காதரன், Van w st Clinic, வண்ணுர்பண்ணை. தொலைபேசி: 7887. (2218)

## சேவை

அகத்தி, சஞ்சீவி, சவுக்கு, இப்பில் இப்பில் ஆகிய கன்றுகளை யாழ். மில்க்வைற் ஸ்தாபனத்தார் இலவசமாக வழங்குகின்ருர்கள். தேவையானேர் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். (2222)

## தேவை

பிரபல பிடவை நிலையத்திற்கு விற்பனையாளர்கள் (ஆண், பெண்) தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2223, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். [2223]

## பயிற்சி

றேடியோ - டெலிவிசன் (செய்முறைப் பயிற்சிகளுடன்) Hotel Management பயிற்சி ஜேர்மன், பிரஞ்சு மொழி வகுப்புக்களும் ஆரம்பம். 10-02-82 அனைவரும்சேரலாம். விபரங்களுக்கு நேரில் வரவும். நாஷனல்அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2187

## நீர்ப்பாசனத் திணைக்களம் கிளிநொச்சிப் பிராந்தியம்

கிளிநொச்சிப் பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனையில் கேள்விப் பத்திரசபையின் தலைவரினுல் கீழ்க்காணும் வேலைக்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரம் அனுப்புதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 350,000/—க்கு அல்லது அதற்குக் கூடிய தொகைக்கு பதிவு செய்யப்பட்ட அல்லது வேறு அரச திணைக்களங்களில் ரூபா 1,000,000/—க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டுமே தகுதி உடையோராவர்.

### வேலை விபரம்

'பாரமான மண் ஏற்றி இழுக்கும் இயந்திரத்தினுல் கிளிநொச்சிப் பிரிவிலுள்ள ஐயங்கன் குளமுறிவிற்கு மண் போட்டு நிரப்புதல்.'

கேள்விப்பத்திரங்கள் 12.02.1982 தொடக்கம் 27.02.1982 வரை வழங்கப்படும். கேள்விப்பத்திர வைப்புப்பணமாக ரூபா 250/— செலுத்தவேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1982ம் ஆண்டு பங்குனி மாதம் 2ந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

க. குமாரசுவாமி
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கிளிநொச்சி.
2203

# யங்ரேயல் சாம்பியன்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் காங்கேசன் துறை யங். ரேயல் விளையாட்டுக்கழகம் சாம்பியனுனது.

கடந்த மாதம் 15 ம் திகதி முதல் மேற்படி மன்றம் இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தி வந்தது. யாழ். மாவட்டத்திலிருந்து பிரபல்யமான பல கழகங்கள் பங்கு பற்றிய இச்சுற்றுப் போட்டியில் காங்கேசன்துறை யங். ரேயல் விளையாட்டுக்கழகமும் மல்லாகம் கிராம முன்னேற்றச்சங்க கோஷ்டியும் சாம்பியன் போட்டிக்கு தெரிவாகின,

காங்கேசன் துறைப் பட்டின சபை மைதானத்தில் இவை இரண்டு கோஷ்டிகளும் மோதிய போது யங்ரேயல் 2—0 கோல்களால் வென்று சாம்பியனுனது,

இச்சாம்பியன் போட்டிக்கு திரு.கிறலர் நடுவராக இருந்தார். கௌரவ விருந்தினராக காங்கேசன்துறைநடேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. க இ. குலசேகரம்கலந்துகொண்டார்

# ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் (339) 149, கஸ்தூரியார் வீதி, ''தம்பியப்பா அன் சன்'' த. சபாநாதன் அவர்களிடம் 1—4—78 முதல் 31—3—80 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் 27—2—82 காலை 9 மணி தொடக்கம் அதே அடைவு கடையில் வைத்து விற்கப்படும்.

643, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். **வி. செ. குட்டிப்பிள்ளை** ஏலவிற்பனையாளர்

2195

# ஈட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு/2692 இலக்க வழக்கில் வாதிகள் கொக்குவில் தாவடி தெற்கு மாணிக்கம் இராசநாயகத்துக்கும் பெண் பொன்னுபரணத்துக்கும் போகவேண்டிய தீர்வைத்தொகை 10,000/—ரூபாவும் மேலும் இதில் 5,000/— ரூபாவுக்கு 10—10—78 முதல் 17—10—80 வரை வருடமொன்றுக்கு 12% வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 5% வீத வட்டியும் வழக்குச்செலவு 807 ரூபா 65 சதமும் விற்பனவுச் சலார்களும், இதில் கொடுக்கப்பட்ட 4,500/—ரூபாவும், செலவில் 500/—ரூபாவும் கழித்து மிகுதித்தொகையைப் பிரதிவாதி சுன்னுகம் ஊரெழு சரவணமுத்து இரத்தினசபாபதி இராசரத்தினம் கைம்பெண் சுகிர்தலட்சுமியிடம் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 03—03—1982 புதன்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அவ்வாதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ். டிஸ்திறிக், வலி. வடக்குப் பகுதி உடுவிற் கோவிற்பற்று தாவடியிறை 'பத்தானை', நில. பர. 5 கல்வீடும் கிணறும் பயிர்களும் தெற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும். இதற்கெல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை. மேற்கு சுப்பிரமணியம் பெண் இராசம்மா விஞதனம் தெற்கு—அப்புத்துரை பெண் அழகம்மாவிஞதனம் இதடங்கலும்.

வ. சி. மகாதேவன்
விற்பனை ஆணையாளர்

553, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 2224

யாழ். நகரமண்டபம்

# மீண்டும் உபயோகத்துக்குத் திறந்து வைக்கப்படுதல்

1972ம் ஆண்டு முதல் பொதுமக்களின் உபயோகத்திற்கு விடப்படாதிருந்த யாழ். நகரமண்டபம் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டு

**10-02-82ம் திகதி புதன்கிழமை**
**மாலை 5-15 மணிக்கு**

மாண்புமிகு மாநகர முதல்வர்

**திரு. இராஜா விசுவநாதன் அவர்களால்**

மீண்டும் பொதுமக்கள் உபயோகத்திற்காக வைபவ ரீதியாக

**திறந்து வைக்கப்படும்**

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறேம்**

### நிகழ்ச்சி நிரல்

01. மங்கள இசை.
02 மன்ற கீதம் — ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியால் அறிமுகம் செய்யப்படும்.
03. மெல்லிசை — ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி குழுவினர்.
04. மன்ற கீதத்தை ஆக்கிய கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்களைக் கௌரவித்தல்.
05. தலைமையுரை — மாண்புமிகு மாநகர முதல்வர்.
06. நன்றியுரை.
07. நடன நிகழ்ச்சி திருமதி . லீலாஆறுமுகையாவின் சதங்கை நர்த்தனலய மாணவிகள்.
08. நாடக அரங்கக் கல்லூரியினர் அளிக்கும் (ஜனுதிபதி விருதுகள் பெற்றது) 'பொறுத்தது போதும்' நாடகம் மேடையேற்றப்படும்.

சி வீ கே சிவஞானம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்,
நகரமண்டபம்,
யாழ்ப்பாணம், 08.02.1982. 2226

## இன்று ஜீ. ஜீ.....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

போக்கால் செய்த மாபெரும் தவறுகும்.

நமது தலைவர், தீர்க்கமான ஆலோசனையின் பின் எமது பொருளாதாரத்தை வளர்க்கவும், ஆட்சியில் பங்குகொள்வதில் எமக்கெதிரான சதித்திட்டங்களை முறியடிக்கமுடியுமென்ற எண்ணத்திலும் ஆட்சியில் பங்குகொண்டு அளப்பரிய சேவைகள் செய்தார். குறிப்பாக தன்இனத்திற்கும் பொதுவாக நாட்டிற்கும் ஆட்சியில் பங்குகொண்ட சில ஆண்டுகளில் ஆற்றிய சேவைகள் மறக்கமுடியாது. இக்காலகட்டத்தில்தான்ஒன்றுபட்டிருந்த தமிழகத்தை இரு கூறுகப் பிரித்துச் சுகம்காண விளைந்தனர். அன்றுதான் தமிழ் சமூகத்தின் தலைவிதி விளையாடத்தொடங்கியது.

உலகநாட்டுச் சபையில் ஆங்கிலம் பேசுவோர் முன்னிலையில் தன்இனத்தினதும் நாட்டினதும் அந்தஸ்தை உயர்த்தும் வகையில் ஆற்றிய பேருரையைப் பாராட்டாத நாட்டினர் இல்லையென்றே கூறவேண்டும்.

அரசியல் வானில் மட்டுமல்ல சட்டத்துறையிலும் தனக்கு மிக்காரும், ஒப்பாரும் மற்ற வகையில் சிறந்துவிளங்கினுர். இந்த நாட்டில் மட்டுமல்ல கடல்கடந்த நாடுகளிலும் தனது சிம்மக்குரலை இத்துறையில் ஒலிக்கச்செய்தார். இவற்றிற்கு உரைகல்லாக எத்தனையோ சிக்கலான வழக்குகளை சாதுரியமான குறுக்குவிசாரணைகளாலும் சட்டநுணுக்கங்களாலும் வெற்றிவாகை சூடித் தனிப்பெருமை படைத்தவர் அமரர் ஜீ. ஜீ.

காலங்கடந்த பின் ஏற்பட்ட இந்த ஒற்றுமை எமது மதிப்புக்குரிய உயர் நீதிபதியாகயிருந்த திரு. சி. நாகலிங்கம் அவர்கள் ஏற்படுத்திய ஒற்றுமையை உருக்குலைக்காதிருந்திருந்தால் தமிழ் இனம் அரசியலில் தக்கஇடத்தைப்பெற்றிருக்கும். இன்றைய காலகட்டத்தில் அமரர் ஜீ. ஜீ. மட்டும் உயிரோடிருந்திருந்தால் ஆட்சியாளருக்குத் தகுந்த சவாலாகவும் தமிழ் இனத்திற்கு தகுந்த வழிகாட்டியாகவும் இருந்து தனது அறிவு, ஆற்றல், சாணக்கியம் ஆகியவற்ருல் எமது துயர்துடைத்திருப்பார்.

## தமிழரின்....

2ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றப்பட்டிருக்கிருர்கள். இது மிகவும் அநீதியானது என்று எடுத்துரைத்து எமது உரிமையை ஒன்றுசேர்ந்து நிலைநாட்ட தயங்கமாட்டோம் என்று கூறி தனது பேச்சை முடிப்பதற்கு முன்பாக அமரர் திரு இறைமைபற்றியும் அரசியல் அமைப்புச் சட்டம் எடுத்துரைத்த கருத்துக்களை தாம் முற்றுமுழுதாக ஏறபதாகவும் அதனை தனது கருத்தாகவும் கொள்ள வேண்டுமென்றும் ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

இப்படியாக எல்லாத்தலைவர்களும் ஒன்றிணைந்த வேளையிலே சடுதியாக காலன் இம் முப்பெரும் தலைவர்களையும் தமிழ்ப்பேசும்மக்களிடமிருந்து பிரித்துவிட்டான். ஆனுல் நாம் இத்தலைவர்களுக்கு செய்யக்கூடிய கடன் அவர்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து செய்வதே.

அமரர் ஜீ ஜீ. எம்மைவிட்டு பிரியும் முன்பு அவரதுஅரசியல் கருத்துக்கும் விடுதலையை விரும்பும் மற்றைய அரசியல் தலைவர்களின் கருத்துக்கும் எவ்வித வித்தியாசமும் இருக்கவில்லை.

எனவேதான் அமரர் ஜீ.ஜீ. யின் மறைவை நினைவுகூரும் இத்தினத்திலே தமிழ்ப்பேசும் மக்கள் பல்வேறு காரணங்களுக்காக வெவ்வேறு இயக்கங்களில் இருந்தாலும் தமிழ்ப் பேசும் மக்களின் விடுதலைக்காகவும், தமிழ்ப்பேசும்மக்களின் இழந்த இறைமையை மீண்டும் பிரயோகிப்பதற்கு எடுக்கப்படும் எல்லா நடவடிக்கைகளிலும் தமிழ்ப்பேசும் மக்கள் அனைவரும் ஏகோபித்து ஒற்றுமையாக இயங்குவதன்மூலமே நாம் அமரர் ஜீ ஜீ க்கு அஞ்சலி செலுத்தமுடியும்.

## நூல் வெளியீட்டுவிழா

(கொழும்பு)

கந்தையா நவரேந்திரன் எழுதிய 'விழிப்புணர்வு பற்றிய விளக்கங்கள் ஜே, கிருஷ்ணமூர்த்தியின் சொற்பொழிவுகளை அடிப்படையாகக் கொண்டவை'' என்ற நூல் வெளியீட்டுவிழா நாளை மாலை ஓய்வு பெற்ற நீதியரசர் திரு வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் சட்டக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் நீதியமைச்சர் கலாநிதி நிசங்காவிஜயத்தினு, சட்டத்தரணி ந. சத்தியேந்திரா, நல்லூா எம. பி. திரு எம். சிவசிதம்பரம், சட்டக்கல்லூரி அதிபர் திரு. வி. இரத்தினசபாபதி ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (வெ)

# நிர்வாகிகள்

(அரியாலை)

யாழ். பரியோவான் கல்லூரியின் ஆசிரிய கழகத்தின் வருடாந்தக் கூட்டம் தலைவர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

புதிய வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு. எஸ். கணபதிப்பிள்ளையும், பொதுச்செயலாராக திரு. யுகபாலசிங்கமும, பொருளாளராக திரு. பி. சிவராசாவும் நிர்வாக சபை உறுப்பினர்களாக திருவாளர்கள் கே. எஸ். எவ். சேவியர் ஆர், எஸ். கந்தையா, வி. துரைச்சாமி, திருமதி இராசசேகரம் செல்வி நடன குருசாமி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## சுவிசேஷக்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்தமாதம் 3ந் திகதிதொடக்கம் 16ந் திகதி வரை யாழ்ப்பாணம் விஜயம்செய்யவிருக்கிருர்கள்.

இக் கப்பலில் எல்லா நாடுகளையும் சேர்ந்த வாலிபர்கள் பணிபுரிகிருர்கள். கப்பல் கடலில் செல்லும்போது மாலுமிகளாகவும். நாடுகளில் நிற்கும்போது இவர்கள் சுவிசேஷ ஊழியர்களாகவும் பணிபுரிபவர்களாவர்.

யாழ்ப்பாணம் வை, எம். ஸி. ஏ. மண்டபத்தில் இலவச புத்தகக்கண்காட்சியொன்றை இவர்கள் அடுத்தமாதம் 5ந் திகதி தொடக்கம் 16ந் திகதி வரை நடாத்தவுள்ளனர், இப்புத்தகக் காட்சியைப் பார்க்க விரும்பும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு விசேஷ ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படவிருக்கிறது.

(அ)

## மினிபஸ்....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

டும்.

வடமாகணத்திற்கப்பால் சேவையில் ஈடுபட்டிருக்கும் மினிவாகனங்களில் நூற்றுக்கு அறுபது சத வீதத்தினர் பிரயாணிகளின் திருப்தியைக் கவனித்து செயல்படுவர். காவல் துறையினருக்கு பயந்து என்று சொல்லிவிட முடியாது. அவர்களுக்கும் சட்டத்தில் சந்து பொந்து உள்ளது தெரியும். எமது நிலை சந்து பொந்தை பிய்த்துவிட்டு ஓடும் அகழான் நிலையாய் உள்ளது.

எம்மை நாமே ஆளவேண்டும் என்ற நிலைக்கு அல்லும் பகலும் போராடும் இக்கால கட்டத்தில் எமக்கு பிரம்புடன் ஒருவர் பின் நின்ருலதான் ஒழுங்கு முறை. ஒரு காலமும் நாமே உணர்ந்து செயல்படமாட்டோம் என்ற அடிமை நிலைக்கல்லவா செல்கின்ருேம். ஒழுக்கவிதிகளைமீறிநடப்பது — அதில் உருவாகும் இன்னல்களை அனுபவிப்பது —எம்மக்களுக்கு ஒரு தனி இன்பம்தானே

சி. சிவசோதி.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

# இரத்தமின்றி சுதந்திரம் பெற்றதால் அதன் பெறுமதி தெரியவில்லை

## ... நூலக அடிக்கல் நாட்டுவிழாவில் முதல்வர் விசுவநாதன் உரை

[ஏ. வி. மாணிக்கம்]

''எமது நாடு இரத்தம் சிந்தால் சுதந்திரம் பெற்றது அதனுல்தான் சுதந்திரத்தின் பெறுமதி உணரப்படவில்லை, ஆகவேதான் விதிவசத்தால் நாடு சுதந்திரம் பெற்ற 48ம் ஆண்டு முதல் ஒன்றிரண்டு தடவைகள் அல்ல, ஏழு தடவைகள் இலங்கை வாழ் தமிழ் மக்கள் தாக்குதல், தீவைப்பு, கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற தேசிய இன ஒடுக்கு முறைகளைச் சந்திக்கநேர்ந்தது. தமிழரின் பண்டைய பண்பாட்டின் வைப்பகமான யாழ் நூல் பொதுசன நூல்நிலையத்தை எரித்தது தாங்கமுடியாத வேதனையை ஏற்படுத்தியுள்ளது''

மேற்கண்டவாறு யாழ் புதிய நூலகக் கட்டிடத்திற்கான அத்திவாரக்கல் நாட்டு விழாவில் யாழ் மாநகரசபை முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் பேசுகையில் கூறினுர்.

புதிய கட்டிடத்திற்கான அத்திவாரக்கல்லை முதல்வர் நாட்டினுர். தொடர்ந்து முதல்வர் இராஜாவிசுவநாதன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. ஆணையாளர் திரு. ஸி. வி. கே. சிவஞானம் வரவேற்புரை நிகழ்த்தினுர்

மேயர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது

'யாழ். பொதுசன நூல் நிலையத்திற்குச் சூழப்பட்ட கொடுமையை நாகரிக உலகமும் உலகப் பத்திரிகைகள் வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் யாவும் ஒருபண்பாட்டுப் படுகொலையென்றும், மனுக்குலத்துக்குவிரோதமான குற்றச் செயல் என்றும் வர்ணித்துள்ளன.

### இலவச நூலகத்தை ஆரம்பித்தவர்

''யாழ். நகருக்கு இலவச நூல்நிலையம் ஒன்றை நிறுவும் யோசனை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அமரர் கே.எம். செல்லப்பாவினுல் ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது சபையின் வேலைப்பகுதி அலுவலகமாக உபயோகிக்கப்படும் ஒரு சிறிய கட்டிடத்தில் அது அமைந்திருந்தது.

### சாம் ஏ. சபாபதியும் லோங் அடிகளும்

''பின்பு 1949ம் ஆண்டில் யாழ். மாநகரசபை மாநகர அந்தஸ்தைப் பெற்றபோது அமரர் சாம் ஏ. சபாபதி அவர்கள் முதலாவது முதல்வராக பதவி ஏற்றுர். திராவிட சிற்பவியல்பாங்கில் அமைந்த ஒரு நூல்நிலையத்தை யாழ் நகரில் அமைப்பதற்கு சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டவர் சாம் சபாபதிதான். நூல்நிலையத் துறையில் புகழ்பெற்றவரான எஸ். ஆர். இரங்கநாதனின் ஆலோசனை பெறப்பட்டது. திராவிட சிற்பவியல் புகழ்பெற்ற நரசிம்மன் திராவிட சிற்பவியல் பாங்கில் தமிழனின் பெருமையைப் பறைசாற்ற கூடியதான ஒரு கட்டடத்துக்குப் படங்களை மாதிரி வடிவத்தையும் தயாரித்துத்தந்தார் அருள்திருத் தந்தை ரி. எம். எப். லோங் அடிகளார் நிதிசேர்ப்பதற்காகத் திரைகடல் கடந்து பணியலரிந்தார். கணிசமான நன்கொடைகளை ஆசியா பவுண்டேஷன், இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஆகிய நிறுவனங்கள் உதவின.

...ன்றிமறாத யாழ்ப்பாண மக்கள் என்றும் அவர்களை மனதில் வைத்துப் போற்றி வருகிறுர்கள்.

### பண்பாட்டுப் படுகொலை

இப்போது நடந்துவிட்ட இழப்பு தமிழ்இனத்திற்கோ தமிழ் நாட்டிற்கோ ஏற்பட்ட தென்றல்ல என்பதைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு நாம் அல்ல முழு உலகமுமே உணர்த்தியிருக்கிறது. நடத்தப்பட்டது ஒரு பண்பாட்டுப் படுகொலை, மனுக்குலத்துக்கு விரோதமான ஒரு குற்றச் செயல் என்பதே உலக அபிப்பிராயத்தின் பொதுப்படையான தீர்ப்பு ஆகும்.

''எதுவனமாயினும் இந்தப் பேரழிவைப் பெரும் பேருக மாற்றிக்கொள்ளும் திருப்புமுனையாக்கிக் கொள்ள வேண்டுமென்பதில் நூல் நிலையக் குழு உறுப்பினர்களும் திடமனதாக இருந்து வருகிறுர்கள். பெரியார்கள் பலரது விருப்பமும் அதுவாகவே உள்ளது.

''ஆகவேதான் இன்றைய நவீன உலகின் தொடர்பில் சகல தொழில்பாடுகளுக்கும் இடம் தருவதாக நரசிம்மனின் மூலத் திட்டத்திற்கு பழுது ஏற்படுத்தாதவகையில் ஒருசில மாற்றங்களை மட்டும் செய்து கொண்டு நூல் நிலையத்தின் மூன்றும் கட்டத்துக்கான அத்திவாரக்கல்லை நாட்டுகின்றும். இதற்குத் தேவையான படங்களுக்குக் கட்டணம்வாங்காது வடிவம் அமைத்துத் தந்திருக்கிறுர் கட்டிடக் கலைஞர் வி. எஸ். துரைராஜா. வெளிநாடுகளில் உள்ள தமிழ் அன்பர்கள் தேவையான நிதிகளை சேர்த்துத் தருவதற்குவாக்குத் தந்திருக்கிறுர்கள். நிதிகளை அனுப்பியும் வருகிறுர்கள். உள்ளூர்வார்த்தகைத்தொழில் தொழில் பிரமுகர்கள் தாமே ஒரு குழுவை அமைத்து நிதி சேர்ப்பதற்குப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறுர்கள். பாடசாலை மாணவர்களின் பங்களிப்பைப் பெறுவதற்காக எதிர்வரும் 22ம் திகதி முதல் ஒருவாரத்தை 'நூலக வாரமாகவும், அவ்வாரத்தில் வரும் 25ம் திகதியை 'நூலகக் கொடித் தினமாகவும்' அனுட்டிப்பதற்கு இப்பகுதிப் பாடசாலை அதிபர்கள் முன்னின்று உழைத்து வருகிறுர்கள். இவர்கள் அனைவருடைய ஒத்துழைப்புடனும், மக்கள் நல்லாதரவுடனும் இத்திட்டத்தை வெற்றிகரமாக முடித்துவைப் போமென்பதில் நம்பிக்கையடைகிறேம். கேள்விகள் கோரப்பட்டு வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும். இது மக்கள் நூலகம் இதனைப் பூர்த்தி செய்ய வேண்டியபொறுப்பும் அவர்களுடையதே

### கோப்பாய் எம். பி. வேண்டுகோள்

கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம் பேசுகையில் ''நூலகம் எரிக்கப்படுவதற்கு முன்பு நூலகத்திலிருந்து பலா எடுத்த பெறுமதியான புத்தகங்கள் இன்னமும் திருப்பி ஒப்படைக்கப்படாமலிருக்கின்றன. இப்புத்தகங்களைக் கறையான் போன்றவற்றுக்கு இரையாக்காமல், உங்கள் நூலகம், உங்கள் புத்தகம் என்ற நிலையில் ஒப்படைத்து, மற்றவர்களும் பயனடைய உதவுங்கள்'' என்றுர்.

### உதவி முதல்வர்

யாழ். மாநகர உதவி முதல்வர் திரு. எஸ். அலோசியஸ் பேசுகையில், காட்டுமிராண்டிகளால் எரிக்கப்பட்ட இந்நூல் நிலையத்தை மீண்டும் கட்டி எழுப்ப, சகலரும் பொருளதவி செய்து ஒத்துழைக்கவேண்டும் ஒன்று கேட்டுக்கொண்டார்.

### ஜனுப் ஷாகுல் ஹமீட்

யாழ். மாநகரசபை உறுப்பினர் ஜனுப் ஷாகுல் ஹமீட் பேசுகையில், யாழ் பொதுசன நூல்நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு எண்ணியுள்ள வேளையில்ஆபிரிக்காக் கண்டத்தில்கூட காட்டு மிராண்டிகள் செய்ய முடியாத செயலை இங்குள்ள காடையர்கள் செய்துள்ளார்கள்

முஸ்லிம்களும் தமிழர்களும் ஒற்றுமையாக — ஓரினமாக வழுவதால் அரசாங்கம் பல துறைகளிலும் முஸ்லிம்களைப் புறக்கணித்து வருகிறது அண்மையில் தமிழ் நாட்டிலிருந்து வந்த ஜனுதிபதிக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் தமிழ்-முஸ்லிம் கலைநிகழ்ச்சிகளை கீழ்த்தரமாக மதிக்கக் கூடியதாக நடாத்தியிருந்தார்கள். இது அரசாங்கத்தின மாற்றுந்தாய் மனப்பான்மையைக் காட்டுகிறது என்றுர்.

சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபரும், யாழ். பொதுசன நூல் நிலையக் குழுவைச் சேர்ந்தவருமான வண பிதா மைக்கேல் யோசேப் அடிகள், மாநகர சபைஉறுப்பினர்கள் திரு.என். ரி. செல்லத்துரை, திருமதி அந்தோனியார் சுவாமிநாதர் உட்படப் பலர் உரையாற்றினர். (மா)

### கலைப்பீட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லாளருடன் நடாத்திய பேச்சுவார்த்தையில் நம்பிக்கையீனம் இருப்பதால் இப்பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து நடாத்துவதென முடிவு செய்யப்பட்டதாக மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

11ம் திகதி நடைபெறும் மான்யக்குழுக் கூட்டத்திலும் முடிவு பாதமாக அமையுமானுல் பல்கலைக்கழக சகலபீடங்களும் உள்ளடக்கிய எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதெனவும் மாணவர் அவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ)

### பிரேதபரிசோதனை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் கொலையா? தற்கொலையா என்று பொலிசாருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இளைஞரின் சடலத்தை யாழ் மாவட்ட பதில் நீதவானும் மரணவிசாரணை அதிகாரியுமான திரு. அ. அமிர்தலிங்கம் ஸ்தலத்துக்குச் சென்றுபார்வையிட்டார்.

[மண்டைதீவு நிரு—மா)

### அரிசியை நிதானவிலையில் விற்க ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

நெற்சந்தைப்படுத்தும் சபையிடமிருந்து அரிசியை கொள்வனவுசெய்து அரிசிக்கு தட்டுப்பாடு நிலவும் காலங்களில் சங்கத்தின் கிளைகளுக்கு ஊடாக அரிசியை நிதான விலையில் விற்பனை செய்வது என்று பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் இயக்குனர்சபை தீர்மானித்துள்ளது.

சங்கத்தலைவர் திரு. எஸ். இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த இயக்குனர் சபைக் கூட்டத்தில் நெற்சந்தைப்படுத்தும் சபையிடம் இருந்து அரிசியைகொள்வனவு செய்வதற்கு ஐந்து லட்சம் ரூபாவை மக்கள்வங்கியிடமிருந்து பெறுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க)

### ஒரே குடும்பத்தவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சியில் டாக்டர்கள் குழு ஒன்று தீவிரமாக ஈடுபட்டு வருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

லொறிச் சாரதியின்நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

### அமரர் ஜி.ஜி.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கிரஸ் வாலிப முன்னணித் தலைவர் திரு. ஆர். ஈ.ஆனந்தராசா, திரு. ரி. சாந்திகுமார், சட்டத்தரணி ஜிம்மி ராஜரத்தினம், திரு. பி. மகேந்திரராசா ஆகியோர் உரைநிகழ்த்துவர். (மா)

### திருக்கோயில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொள்வார்,

பொதுச்சபைக் கூட்டத்தில் குன்னக்குடா மீனவர் வீடமைப்புத்திட்ட பிரச்னை உட்பட சர்ச்சைக்குரிய பல பிரச்னைகள் குறித்து ஆராயப்படும். (இ)

''உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்

# பனம்பொருள் உற்பத்திகளை அறிமுகப்படுத்தவேண்டும்'

## 'கற்பகம்' திறப்புவிழாவில் யாழ். அரசஅதிபர்

[யாழ்ப்பாணம்]

''பனம் பொருள் உற்பத்திகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அறிமுகப்படுத்தி பனை வளத்தினைப் பெருக்க வேண்டும்.''

பனை அபிவிருத்திச்சபையின் 'கற்பகம்' விற்பனை நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில், யாழ். மாவட்டச் செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதியில் அமைந்துள்ள ப. நோ. கூ. சங்கக் கட்டிடத்தில் 'கற்பகம்' விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

பனம்பொருள் அபிவிருத்தி சபையின் தலைவரும், பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளருமான திரு என். பி. ஜகநாதன் தலைமையில் இத் திறப்புவிழா நடைபெற்றது.

திரு. தேவநேசன் நேசையா தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

• கற்பகத்தில் விற்பனையாகும் சகல பொருட்களும், தரமுள்ளதாகவும், பாதுகாப்பாகவும்,சுகாதாரமாகவும் பேணப்படவேண்டும்.

''இங்கு வைக்கப்பட்டிருக்கும் கலைப் பொருட்கள், உணவுப் பொருட்களைப் பார்க்கும் பொழுது, குடிசைக் கைத் தொழில், சிறுகைத்தொழில்களில் ஈடுபட்டவர்களை ஒன்று சேர்த்திருப்பது போல் தெரிகிறது. இது பனம் பொருள் அபிவிருத்திச்சபையின் பெரிய சாதனையாகும்.''

### 100 லட்சம் பனைகள்

பனம்பொருள் அபிவிருத்தி சபை ஆலோசகரும், பொது முகாமையாளருமான கலாநிதி எஸ். மோகனதாஸ் பேசுகையில் கூறியதாவது:

''இலங்கை முழுவதிலும் 100 லட்சம் பனைமரங்கள் காணப்படுகின்றன. இவற்றில் 75 சதவீதமானவை யாழ் மாவட்டத்தில் மட்டும் காணப்படுகின்றன. பல நூற்றுக்கணக்கான பனம்பொருள் தின்பண்டங்களுக்கும், ஏனைய உபயோகமான பொருட்களுக்கும் தகுந்த சந்தைவசதிகள் காணப்படாமையினுல் இவற்றின் உற்பத்தியாளர்கள் கஷ்டங்களை அனுபவித்துவருகின்றனர். 'கற்பகம்' ஊடாகச் சந்தைவசதிகளை ஆரம்பிப்பதன்மூலம் பனம்பொருள் அபிவிருத்திச்சபை அதிகப்பயனடையும்''

'கற்பக' தரு நாயகர் திரு. கனகராசா, பனைஅபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. என். பி. ஜெகநாதனுக்கு பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார்.

(கி. மா)

## மரண அறிவித்தல்

### திருமதி முத்தம்மா சாமிகந்தையா

சுளிபுரம் முத்தம்மா காலமானுர். இவர் காலஞ்சென்ற சாமிகந்தையாவின் மனைவியும், சிவசுப்பிரமணியம் (மின்சார சபை, யாழ்ப்பாணம்), நடராசா (உகண்டா), சங்கரப்பிள்ளை, தனலட்சுமி, வள்ளி நாயகி ஆகியோரின் தாயாரும், தம்பிஐயா, வரதராசா (இ. போ. ச.), திலகவதி, திருமதி நடராசா (ஆசிரியை, மானிப்பாய்), நாகேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் ஆவார். ஈமைக்கிரிகைகள் சுளிபுரம் திருவடிநிலை மயானத்தில் இன்று (09—02—82) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

2228

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காகயாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper at the General P.O., Sri Lanka Regd. Q B.100236/81. P.O. Box 49, Jaffna தொலைபேசி: 7707, 389, 8126.